# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 42.

### நோய்த் தீர்ச்சை.

எனக்கு ஏற்பட்ட பாரிசநோய் என்னைவிட்டு விலகாமலிருந்தபடியால், சிறிது கலக்கத்தை உண்டாக்கிற்று; ஆனால் மருந்தை உபயோகிப்பதில் பயனில்லை என்பதையும், வெளிப்பிரயோகத்துக்கு மட்டும் மருந்தை உபயோகித்து ஆகார விதியை மாற்றிக் கொண்டால் நோய் ஒழியும் என்பதையும் நான் அறிந்து கொண்டிருந்தேன்.

எனவே எனக்கு 1890-ம் வருஷம் முதல் தெரிந்தவரும், மரக்கறி ஆகாரத்தையே ஆதரிப்பவரும், நோய்களை ஆகாரமாற்றுதலால் சிகிச்சை செய்கிறவருமான டாக்டர். அல்லின்சனை வரவழைத்தேன். அவர் என்னை முற்றும் பரீக்ஷித்துப் பார்த்தார். நான் பால் அருந்துவதில்லை என்று செய்திருக்கும் தீர்மானத்தை அவருக்கு அறிவித்தேன். அவர் என்னை உற்சாகப்படுத்தி "நீங்கள் பால் உட்கொள்ள வேண்டியதில்லை. உண்மையில் சில தினங்களேனும் நீங்கள் கொழுத்த ஆகாரத்தை உட்கொள்ளக் கூடாதென்பது தான் என் கருத்து" என்று கூறினார். பிறகு அவர் எனக்கு, சாதாரண ரொட்டி, வெங்காயம், பீட்ரூட் போன்ற கிழங்கு வகைகள், ஆரஞ்சுப் பழம் முதலிய வற்றைமட்டும் உட்கொள்ளும்படி யோசனை கூறினார். அவர், மேற்கூறியவைகளை நான் பச்சையாகவே சாப்பிட வேண்டுமென்றும், அவைகளை மெல்ல முடியாவிட்டால் நெருப்பில் வதக்கலாமென்றும், ஆனால் வேக வைக்கக் கூடாதென்றும் கூறினார்.

இம் முறையை நான் மூன்று நாட்கள் அனுஷ்டித்தேன். ஆனால் பச்சைக்காய்கறிகள் எனக்கு ஒத்துக்கொள்ள வில்லை. அத்தகைய சோதனையைப் பூரணமாகப் பார்க்கக் கூடிய நிலையில் என் தேகம் இருக்க வில்லை. பச்சைக் கிழங்குகளையும் காய்களையும் சாப்பிட நான் அஞ்சினேன்.

டாக்டர். அல்லின்சன் நாள் முழுதும் என் அறையின் சாளரங்களைத் திறந்து வைத்திருக்க வேண்டுமென்றும், மிதமான சூடாகவுள்ள ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டுமென்றும், எந்தெந்தப் பாகத்தில் நோயுண்டோ அந்தந்தப் பாகத்தில் எண்ணெயைத் தடவவேண்டுமென்றும், தினசரியும் 15 அல்லது 30 நிமிஷங்கள் வரை நல்ல வெளி மைதானத்தில் நடக்க வேண்டுமென்றும் யோசனை கூறினார். இந்த யோசனைகள் எனக்கும் இஷ்டமானவைகளாகவே இருந்தன.

என் அறையின் ஜன்னல் கதவுகள் பிரான்சு தேச முறைப்படி அமைக்கப்பட்டிருந்தபடியால் அதை முழுதும் திறந்துவைத்தால் மழைத் தண்ணீர் அறையில் பிரவேசிக்கக் கூடியதாக இருந்தது. ஆதலின் நான் நல்ல காற்று மட்டும் உள்ளே வரக்கூடியவாறு ஜன்னல்களில் வைக்கப் பட்டிருந்த கண்ணாடித் துண்டுகளை முறித்தெறிந்து விட்டுக் கதவுகளைப் பாதி திறந்து வைத்தேன். இம்முறைகளால் எனக்கு ஒருவாறு சௌக்கியம் ஏற்பட்டதென்றாலும் பூர்த்தியாகச்சொஸ்தமடையவில்லை.

### என் ஏமாற்றம்.

லேடி சிசிலியா ராபர்ட்ஸ் அபூர்வமாக என்னை வந்து பார்த்துப் போவதுண்டு. ஆதலின் நாங்கள் நண்பர்களானோம். அவர் நான் பால் அருந்தவேண்டுமென்று விரும்பினார். ஆனால் நான் என் கொள்கையில் உறுதியுடனிருந்தபடியால் அவர் பாலுக்குப் பதிலாக அதே குணத்தைத் தரக்கூடிய வேறொரு பொருளைக் கண்டுபிடிக்க முயன்றார். சிலர் அவருக்குப் புட்டிப்பால் கலப்பதல்லவா என்று யோசனை கூறினார்கள். அவர்கள் புட்டிப்பாலில் பால் கலக்க வில்லை யென்றும், ஆனால் பாலின் குணத்தைத் தரக்கூடிய வகையில் ரசாயனப் பொருள்களால் தயாரிக்கப் பட்டதென்றும் கூறினார்கள். ஆனால் லேடி சிசிலியா, என்மதக் கொள்கைக்கு அதிக கௌரவம் கொடுத்தாரென்பதை நான் அறிவேன். ஆதலின் நான் அவரை முழுதும் நம்பி விட்டேன். நான் புட்டிப்பாலைத் தண்ணீர் கலந்து ருசிபார்க்கும் பொருட்டு அருந்தினேன். உடனே அந்த புட்டியின் மீது ஒட்டப்பட்டிருந்த, அது எவ்வாறு செய்யப்பட்டது; எப்படி உபயோகிப்பது என்னும் விவரங்களடங்கிய காகிதத்தை (லேபிலைப்) படித்துப் பார்த்தேன். அது பாலினால்தான் செய்யப்பட்டதென்பதை அறிந்து விசனப்பட்டேன். எனவே அதை உபயோகிப்பதையும் நான் விட்டு விட்டேன்.

நான் அறிந்தவற்றை லேடி சிசிலியாவுக்கு அறிவித்து அதற்காக அவர் கவலைப்பட வேண்டியதில்லை யென்றும் தெரிவித்தேன். எனினும் அவர் அதைப்பற்றிக் கவலைப் படுவதற்காக அதிவிக அவசரமாக ஓடிவந்தார். அவருடைய நண்பர் அந்த லேபிலைப் பார்த்ததில்லை. எனவே நான் அவரிடம் அவர் இதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லையென்றும், ஆனால் நான் அந்தப்புட்டிப் பாலையும் உபயோகிக்க முடியாதென்றும் கூறிவிட்டேன். அன்றியும் தெரியாமல் சிறிது புட்டிப் பாலை உட்கொண்டு விட்டதற்காக நான் வருந்தவில்லை என்பதையும், அதற்காக அவரைக் குறை கூறப்போவதில்லை யென்பதையும் அறிவித்தேன்.

லேடி சிசிலியாவுடன் நான் நடந்து கொண்ட மற்ற விஷயங்களை யெல்லாம் விட்டுச் செல்லவேண்டி யிருக்கிறது. இவ்வாறு பல முயற்சிகளையும் ஏமாற்றங்களையும் நான் அடைந்து கொண்டிருந்தபோது எனக்குப் பலவித சௌகரியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்த பல நண்பர்களைப் பற்றியும் நான் மறக்கமுடியாது. உண்மையில் ஈசுவரன், யார் தன்னிடம் அழியா பக்தி கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கே பல கஷ்டங்களையும் கொடுத்துச் சோதிப்பது வழக்கம்.

### பிரயாண ஏற்பாடு.

டாக்டர். அல்லின்சன் மறுமுறை என்னை வந்து பார்த்தபோது அவர் எனக்கிட்டிருந்த கண்டிப்பான கட்டளைகளை யெல்லாம் ஒருவாறு தளர்த்திவிட்டு கடலைக்காய் வெண்ணெய்யையும், ஆலிவ்எண்ணெய்யையும் கொழுப்புக்காக உபயோகிக்கும்படியும், எனக்கு இஷ்டமானால் அரிசியையும் காய்கறிகளையும் வேக வைத்துச் சாப்பிடலாமென்றும் கூறினார். இந்த மாறுதலை நான் விரும்பியபோதிலும், இதனாலெல்லாம் என் தேகம் பூர்த்தியான சொஸ்தமடையவில்லை. நான் படுக்கையிலேயே இருக்க வேண்டியதாக இருந்ததுடன் என்னை ஒரு டாக்டர் கவனித்து வரவேண்டியதாகவும் இருந்தது.

டாக்டர். மேத்தாவும் அப்போதைக்கப்போது என்னை வந்து பார்த்து அவருடைய கட்டளைகளுக்கு நான் கட்டுப்படுவதானால் எனக்குச் சொஸ்தம் செய்வதாகக் கூறினார்.

விஷயங்கள் இவ்வாறு நடந்து கொண்டிருந்தபோது ஸ்ரீ. ராபர்ட்ஸ் ஒரு நாள் என்னைப்பார்க்க வந்தபோது நான் இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார். அவர், "இன்னும் அதிகமான குளிர் தோன்றும், தாங்கள் நெட்லேயுக்குப் போகச் சாத்தியமில்லை. இந்தியாவில் தான் தாங்கள் பூரண சொஸ்தமடையலாமாதலின் தாங்கள் இந்தியாவுக்குப் புறப்படுவதே நலம். தங்கள் தேகம் சொஸ்தமடைந்த பின்னரும் யுத்தம் நடந்து கொண்டிருக்குமாயின் எவ்வளவோ வகையில் பின்னர் உதவி புரியலாம். இதுவரையிலேயே தாங்கள் செய்திருப்பது உபாய உதவி என்று கருத முடியாது" என்று கூறலானார்.

நான் அவருடைய யோசனையை ஒப்புக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானேன்.

# வைதிகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

4-வது அத்தியாயம்.

### சாக்கடை ஸ்நானம்.

(முன் தொடர்பு)

காலமோ மாறி விட்டது. உலகமோ கெட்டு விட்டது. நியாயமோ பதுங்கிக் கொண்டது. பணத்திற்கோ கண் குருடாய் விட்டது. கீழ் சாதிக்காரனே தொட்டு விட்டான். தீட்டோ ஒட்டிக் கொண்டது. துக்கத்தின் மேல் துக்கம் தொடர்ந்து நிழல் போல் வருகிறது. என் செய்வேனென எண்ணிக் கொண்டே 2-வது அத்தியாயத்தினிறுதியில் கூறியபடி நமது வைதிகர் இன்ஸ்பெக்டரை விட்டு தன் அபஜெயத்தையும், தீட்டாகி அடைந்த அவமானத்தையும் பொறுக்க முடியாமல் பொறுத்து மன முருகி வருந்தி வழி நடந்தார்.

கையில் காசில்லாக் குறைவாலும், தீர்த்தஸ்தல விதி தெரியாக் குறைவாலும், அரட்டு மிரட்டுக்கு அதைரியத்தால் பயந்ததினாலும் ஜெயம் பெற வைதிகர் பண்டை விதியின் பயனென மனதைச் சமாதானப் படுத்தியும் வருந்தியுமாகச் சென்றார். — 'தீர்த்தஸ்தலங்களில் நியாயம் பெறத் தங்கக் கைகளும், இரும்புக்கால்களும் வேண்டு' மென்ற தற் கால அறிஞர் மொழி கவனிக்கற் பாற்று. செல்வத் திமிரினாலோ, அல்லது அநீத ஆகாயிகளாலோ அநியாயக்காரர்கள் தீர்த்தஸ்தலத்தில் ஜெயித்து விட்டாலும் அவரவர்கள் மனச் சாட்சியான பெரிய தீர்த்தஸ்தலமே அவர்களுக்குப் பலன் கொடுத்துமே.

இரவு சுமார் மணி எட்டிருக்கலாம். மத்தியானம் சத்திரத்தில் சாப்பிட்ட சாப்பாடு வைதிகருக்கு இன்னும் மூன்று நாட்கட்கு பசி பொறுக்கும் போலிருந்தது. அயலூரில் வந்து இவ்வளவு கஷ்ட மூட்டைகளைக் கட்டிச் கொண்ட வைதிகர் மல ஜலங் கழிக்க ஊருக்கு வெளியே சென்றார். மலவாதை நீக்கிக் கொண்டு தண்ணீர் கிடைக்காமல் சிறிது தூரம் சென்று அங்கோர் ஓடையைக் கண்டார். மனிதர் நடமாட்ட மில்லாததோடு அஞ்ஞானம் போ லிருள் சூழ்ந்திருந்தது. ஏதோ துர் நாற்றம் வீசுவதைக் கண்டு திண்டால் மூர்ச்சை சேர்த்து தலையின் பின் புறம் கட்டிக் கொண்டார். ஏதோ ஒரு பிராணி சமீபத்தில் இறந்து கிடக்கலா மென யூகித்துக் கொண்டார். வந்த வேலையை முடித்துக் கொண்டார். தண்ணீரில் பாசம் மிகுதி போலும், தண்ணீர் கலங்கிப் போயிருக்கிறதென மனதி லெண்ணிக் கொண்டார். ஓடையை விட்டு மேலேறும் போதுகால் இடறித் தண்ணீரில் விழுந்தார். ஓடையில் தண்ணீர் முன்றடியே ஓடியதாலும் வைதிகர் விழுந்த வேகத்தில் உச்சி முதல் உள்ளங் கால் வரை நனைந்து விட்டது. பயந்தார். பின் எழுந்து நின்றார். மூக்கின் மேல் முகத்தில் கட்டியிருந்த துணியைக் காணோம். அச் சலத்தினின் றுண்டான துர் நாற்றக் காற்று வைதிகரின் மூக்கு வழி மூளை யிடம் சென்று 'நீங்கள் விழுந்தது சாக்கடைக் கால்வாய்; அதிலிருந்து பிறந்தவனு' னெனச் சொல்லிற்று.

வைதிகர் தனக்குச் சாக்கடையில் ஸ்நானம் கிடைத்து விட்டதே யென்று ஏங்கி இதெல்லாம் கிரகச்சார மென்று வருந்தி ஓடையை விட்டு வெளியேறி வஸ்திரத்தைப் பிழிந்து உடம்பைத் துடைத்து வந்த வழி சென்றார். இங்ஙனே நமது வைதிகர் முதலில் தீர்த்த மாடிய சாக்கடைக் கங்கை. சிறிது தூரத்தில் தெப்ப மிருப்பதை அங்கொருவரா லறிந்து அங்கு சென்று ஸ்நானம் செய்து பூஜை முதலியவை சரிவர முடித்து ஊருக்குள் வந்தார். அங்கு ஓர் கடைசி வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார். அத் திண்ணையி லொரு மூலையில் தலை யணை யொன்று தென்பட்டது. நமது வைதிகர் இறைவனின் சமய உதவியை எண்ணிக் கொண்டு அதைத் தன் தலைக்கு வைத்துக் கொண்டார். பல கஷ்டப் பட்ட அசதியால் நித்திரா தேவியின் சிநேகம் சிரம மின்றிக் கிடைத்து விட்டது.

(தொடரும்.)

# மனிதரில் ஜாதி உண்டா?

பக்ஷி ஜாதிகளிலும் மிருக ஜாதிகளிலுமே ஜாதிப்பிரிவு உண்டே யொழிய மானிடப் பிறவியில் கிடையாதென்பதை நிதர்சனப்படுத்தலாம். எப்படி யென்றால், பக்ஷிகளில் ஜாதி ஒன்றுக்கு 50 வீதம் 20 ஜாதிகளில் 1000 பக்ஷிகளையும், மிருகங்களில் ஜாதி ஒன்றுக்கு 50 வீதம் 20 ஜாதிகளில் 1000 மிருகங்களையும் சேகரித்து பக்ஷி ஜாதிகளை ஒருவண்டியிலும் மிருக. ஜாதிகளை ஒரு வண்டியிலும் ஏற்றி வேறு நூரிடத்திற் கனுப்பினால் அங்குள்ள ஒருவர் பக்ஷிகளை 20 பிரிவாகவும், மிருகங்களை 20 பிரிவாகவும் அதன் அதன் இயற்கை ரூபத்தைக் கண்டு பிரித்து விடுவார்கள். மேலும் பட்சி ஜாதிகளிலாவது மிருகஜாதிகளிலாவது ஒரு வகுப்பு ஆணுக்கு மற்றொரு வகுப்பு பெண்ணுடன் புணர்ச்சி கொள்ள இச்சை உண்டாக வில்லை. இதுவன்றோ கடவுள் பிரித்துச் சிருஷ்டித்த ஜாதியாகும்?

இனி மனிதரைக் கவனிப்போம். மனிதர்களில் அய்யர், நாடார், பிள்ளை, முதலியார், நாயுடு, செட்டியார், தேவர், நாவிதர், வண்ணார், பறையர், சக்கிலியர் முதலிய பல்வேறு வகுப்பார்களில் வகுப்பு ஒன்றுக்கு 50 பேர் வீதம் 20 வகுப்பில் 1000 பேர்களைப் பிறிதோரிடத்திற்கு ஒரு வண்டியில் ஏற்றியனுப்பி அங்குள்ள ஒருவரை வகுப்புவாரி பிரிக்கச்சொன்னால் பிரித்துவிட முடியுமா? முடியாதல்லவா? பிரிக்க வேண்டுமானால் குருடன் தன் முன்னிற்கும் ஒருவனை நீ யார் என்று கேட்டு அறிவதுபோல் நீ என்ன ஜாதி நீ என்ன ஜாதி என்று கேட்டுத் தானே பிரிக்கலாம். இதைக்கொண்டாவது ஜாதிப்பைத்தியம் குருட்டுக் கொள்கை என்பது இந்த மதாபிமானிகளுக்கு விளங்கவில்லையா. மேலும் மனிதருக்குள் ஜாதிப் பிரிவு இருக்குமானால் ஒரு பெண் நாயைக் கண்டு ஒரு ஆண் பன்றி புணர இச்சை கொள்ளாதது போலும், ஒரு பெட்டைக் கோழியைக் கண்டு ஒரு ஆண் புறா புணர இச்சை கொள்ளாதது போலும் மனிதருக்குள்ளும் இருக்க வேண்டுமல்லவா? மனிதரில் எந்த வகுப்புப் பெண் பேரிலும் எந்த வகுப்பு ஆணும் இச்சை கொண்டு ஒன்றோடொன்று சம்மதத்துடன் புணர்ச்சி கொண்டு சுக்கில சுரோணிதம் ஒன்றாய் உருண்டு திரண்டு குழந்தையாய்ப் பிறந்து வருகிறது. இது நாம் கண்ணாரக்கண்ட அனுபவ சித்தாந்தமாகும்.

ஆகையால் மனிதரில் ஜாதிப் பிரிவு இல்லை யென்பது சிறு பிள்ளைகளும் அறிந்துகொள்ளக் கூடிய நிலைமையில் நன்கு விளங்குகிறது. இப்படி இருக்கிறதை விட்டு வருணாச்சிரம மகாநாடு கூட்டுவது பித்தர்கள் செய்கையேயாம். இந்தப் பித்தம் ஒழியுமாறு மருந்துகொடுக்க அறிவாளிகள் வெளிக் கிளம்புங்கள்.

மீ சி. சுந்தரநாடார்,
போடிநாயக்கனூர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அரிய வுரைகள்.

ஜனங்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உணரும்படி செய்து அவர்களுக்குக் கட்டுப்பாடாகவும் அமைதியுடனும் எதிர்த்து நிற்கும் வலிமையையும், துன்பம் சகிக்கும் திறனையும் தருவது எதுவும் நம்மை சுயராஜ்யத்துக்கு அருகில் கொண்டு செல்வதாகும்.

—மகாத்மா காந்தி.

இந்தியாவில் ஒரு காலத்தில் பணக்காரனுக்குச் சில பொறுப்புகளும் கடமைகளும் ஏற்பட்டிருந்தன. சமூகத்துக்கு அவன் பலவழிகளிலும் உதவி செய்து வந்தான். தற்போது சமூக நிலை மாறிவிட்டது. பணக்காரர்கள் தங்கள் சொந்த சுகத்தையே பார்த்துக்கொள்வதென்று ஏற்பட்டுவிட்டது. பணம் படைத்தவன் பொது ஜன க்ஷேமத்துக்குப் பொறுப் பேற்றவன் என்னும் கொள்கை மறைந்தது. செல்வர்கள் தங்கள் பணங்களைக் கண்டவாறு பட்டணங்களில் செலவழிக்கிறார்கள். கிராமத்து ஏழைகள் தங்கள் கதியை நினைந்து புலம்புகிறார்கள்.

—ரவீந்திர நாததாகூர்,

இராமாயணத்தில் அற்பக்குரங்குகளே பலவீனமான குரங்குகளே ஸ்ரீ ராமர் அன்பினால் ஒருங்கு சேர்த்து மகத்தான பல முன்ன சைன்யமாக்கிவிட்டார். அன்பெனும் தளையினால் அவை (வானரங்கள்) பிணைக்கப்பட்டிருந்ததினால் மகா பராக்கிரமசாலியான இராவண அரக்கனை தொலைத்துவிட்டன. எனவே நமது கதி மோட்சமும் அவ்வகை அன்பையே எதிர்பார்க்கிறது.

ஷியார்.

நமது பிறப்பிலிருந்து பகைமை, வெட்கம், குலம், கல்வி, அச்சம், புகழ், ஜாதி, அகங்காரம் என்னும் எட்டு வகைத்தளைகளால் நாம் பிணிக்கப்பட்டுள்ளோம். கடவுளை தியானிப்பதற்கு இத்தளைகளை யெல்லாம் அறுத்துவிட வேண்டும். தியானத்தின் போது யான் கழட்டிவைத்திருக்கும் இந்தப் பூணூல், நான் பிராமணனாகவின் எல்லோரினும் உயர்ந்தவன் என்பதற்கு அறிகுறியாயிருக்கிறது. காளியைத் தியானிக்கும் போது அத்தகைய எண்ணங்களெல்லாம் போய்விடவேண்டு மாதலின் பூணூலை கழற்றி வைத்து தியானம் செய்கிறன்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்,

ஓர் அறையில் ஏராளமாகத் தங்கம் இருக்கிறதென்றும் அடுத்த அறையில் திருடன் ஒருவன் இருக்கிறானென்றும் இரண்டு அறைகளுக்கு மிடையே மெல்லிய சுவர் ஒன்று இருக்கிறது என்றும் வைத்துக்கொள்ளுங்கள் அத்திருடனால் அமைதியாகத் தூங்கமுடியுமா? சுவரை இடித்துத் தங்கத்தைக் கைப்பற்ற அவன் முயல மாட்டானா? அம்முயற்சி தடைப்பட்டால் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடாதா? என்னுடைய நிலையும் தாயி(காளியி)னுடைய பிரிவினால் அது போன்றிருந்தது.

—ஷியார்.

காட்டு மிராண்டி ஒருவன் மிருகபலி கொடுக்கப்போகிறான் என வைத்துக் கொள்வோம். அவனுக்கு நான் அன்புத் தொண்டு ஏதேனும் செய்து அவன் என்னை நண்பனாக ஏற்றுக் கொண்ட பிறகே அப்பலியை எதிர்க்க எனக்கு அந்தஸ்து உண்டு.

—ஸ்ரீ காந்தியடிகள்.

உலகம் எண்ணிலாத் தவறுகள் எவ்வளவோ செய்கின்றது. அவற்றைப்பற்றித் தீர்ப்புச்செய்ய நான் யார்? நானே குறையுள்ளவனைபடியால் என் குறைகள் விஷயத்தில் பிறர் தயாளமும் சகிப்பும் காட்ட வேண்டுமென விரும்புகிறபடியால் உலகத்தின் குறைகளை நான் சகித்துக் கொண்டிருக்கிறேன். நான் தலையிட்டுக் [illegible]

விளையக் கூடிய சந்தர்ப்பம் நேர்ந்தால் மட்டுமே தலையிடுகிறேன்.

—ஷியார்.

இவ்வுலகில் நாம் செய்யக்கூடாதவை யென்று கருதும் பல காரியங்களைச் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். யுத்தத்தை நான் எவ்வளவு வெறுக்கிறேனே அவ்வளவு மிகச் சிறு உயிர்ப்பிராணியை வதை செய்தலையும் வெறுக்கிறேன். ஆயினும் எத்தனையோ சிறு உயிர்களை நான் ஓயாமல் வதைக்கவேண்டியவனா யிருக்கிறேன். என்றைக்கேனும் ஒருநாள் இச்சகோதாக் கொலையை அடியோடு நிறுத்திவிடும் சக்திபெறலாமென்னும் நம்பிக்கையுடன் நான் அப்படிச் செய்து வருகிறேன். இச்சிறு உயிர்வதை செய்த போதிலும் நான் அஹிம்சை உபாசகன் என்று சொல்லப்பட வேண்டுமானால் மேற்படி நோக்கத்திற்காக நான் உண்மையுடனும் இடைவிடாமலும் முயன்று வர வேண்டும்.

—ஷியார்.

பூரணத்துவம் அடைந்த மனிதர்கள் அஹிம்சையைப் பூரணமாகக் கைக் கொண்டு வாழ்வதின் அவசியத்தை அடிப்படையாகக் கொண்டே மோட்சம் அதாவது உடம்பிலிருந்து விடுதலை பெற்ற வாழ்க்கை என்னும் தத்துவம் ஏற்பட்டிருக்கிறது. எதிதேனும் ஹிம்சைக்கிடங்கொடாத உடைமை இவ்வுலகில் எதுவுமில்லை. உடம்பும் அத்தகையதே. உண்மையாதெனில் முரண்பட்ட கொள்கைகளுக்கிடையே தர்ம மார்க்கம் எதுவென்று திட்டமாக நிர்ணயித்து நடத்தல் எப்போதும் எளிதன்று.

—ஷியார்.

## பல திரட்டு.

இராணுவச் செலவுக்காக இங்கிலாந்து 100—க்கு 14 வீதமும் பிரான்ஸும் இத்தாலியும் 10 வீதமும் ஜெர்மனி 5 வீதமும் ஜப்பான் 10½ வீதமும் தங்கள் தங்கள் வருவாயினின்றும் செலவு செய்கின்றன. ஆனால் தரித்திர இந்தியவோ 100—க்கு 42 வீதம் செலவு செய்கிறதாம்.

* *

இந்தியாவிலிருந்து இங்கிலாந்து செல்லும் வழியிலுள்ள கடலினடியில் 8 கோடி பவுன் பெறுமான தங்கமும் நகைகளும் தவறிக்கிடப்பதாகச் சொல்லப்படுகிறது.

* *

எலி பிடிப்பதற்காக விஷமில்லாத பெரிய மலைப் பாம்புகளை மெக்ஸிகோவில் வீட்டில் வைத்து வளர்க்கிறார்களாம்.

* *

சென்னையில் நடந்த அகில இந்திய சங்கீத மகாநாட்டிற்கு ரூ 13022 வசூலாகியிருந்ததில் ரூ 7552–3–3 செலவானது போக மீதத்தொகை ஷை கழகக்கமிட்டியார் வசமிருக்கிறது.

* *

திரு. சுபாஷ் சந்திரபோஸ் மற்றவர் எதிர்ப்பின்றி கல்கத்தா நகரசபையின் அங்கத்தவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

* *

பட்லர் கமிட்டியின் முன்பு கொச்சி அரசாங்கக் கட்சியை எடுத்துரைக்க அவ் வரசாங்கத்தார் சர். சி. பி. இராமசாமி ஐயரை நியமித்திருக்கின்றனராம்.

* *

பர்தோலி தாலுக்கா வாசிகள் அரசாங்கத்தார் இணங்கி வராத வரை உயர்த்தப்பட்ட வரியை யன்றிப் பழைய வரியையுஞ் செலுத்துவதில்லை யென்று தெரிவித்து விட்டனராம்.

* *

சென்னையில் 12 வயதுப் பையன் ஒருவன் செக்கு ஓட்டிக் கொண்டிருக்கையில் பளுவுக்காக செக்கின் மீது வைக்கப்பட்டிருந்த பெருங் கருங் கல் அவன் மேல் விழுந்து இறந்து போனான்.

## வரி கொடாமை.

### எட்டையாபுரம் ஜமீனில் போலீஸ் அமுல்.

எட்டையாபுரம் ஜமீனுக்குச் சொந்தமான இராமனதபுரம் ஜில்லா சாத்தூர் தாலுகா எல்லைக் குள்ளிருக்கிற கிராமங்களிலுள்ள குடிகள் சில வருடங்களாக மாமூல் கிஸ்திகளைக் கொடுக்காமல் மறுத்து வந்தனர். இதனால் ஜமீன்தார் மேற்படி குடிகள் மீது நியாய ஸ்தலத்தில் வழக்குத் தொடுத்து டிக்கிரி வாங்கி குடிகளிடத்தில் சர்க்காரின் உதவியின் மேல் நிறைவேற்றியதினால் சுமார் 20 பேர்கள் வரை சிறை வாசம் செய்து வருகிறார்கள் என்றும், இதனால் மற்ற குடிகள் ஒற்றுமை யுடன் வரி மறுக்கவே ஜமீன்தார் இராமனதபுரம் கலெக்டர் அவர்களுடன் கலந்து யோசித்து முடிவில் இராமனதபுரம் டிவிஷனல் ஆபீஸர், ஜில்லா போலீஸ் சூப்பிரண்டு, ஜமீனின் பர்ஸனல் அஸிஸ்டண்டு முதலியவர்கள் சுமார் 100 ரிசர்வ் போலீஸ் படைகளுடன் மேற்படி கிராமங்களுக்குச் சென்று வேப்பிலைப்பட்டி யென்ற கிராமத்தில் முகாம் செய்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமமாகச் சென்று போலீசார் கிராம வீதிகளில் பாராச் செய்ய வரி வசூல் செய்து வருகிறார்களென்றும், சென்ற ஒரு வாரமாக இவ்விதம் நடந்து வருகிற தென்றும், வரி மறுப்பவர்களிடம் பலாத்காரமாகவும், மன்னிப்புக் கேட்பவர்களிடம் பாதித் தொகையும், வரி வசூல் செய்து நியாய ஸ்தலத்தில் எதிர் வாதம் செய்கிறவர்களிடம் முழுத் தொகையும், மற்றவர்களிடம் பாதித்தொகையுமாக சுமார் 4000 ரூபாய் வரை வசூலாகியிருக்கிற தென்று தெரிகிறது.

## குமஸ்தாக்கள் விடுமுறை.

### முதலாளியின் தியாகம்.

தூத்துக்குடி வியாபாரத்திற்கு அடிப்படையான வி. கஸ்டம்ஸ் ஆபீஸ், போர்ட் ஆபீஸ், ரெயில்வே கூட்ஸ், தந்தி தபால்ஆபீஸ், பாங்கு ஸ்தலங்கள், கீதிஸ் தலங்கள் இன்னும் இதர அரிய பெரியஸ்தலங்களுக்கும்பிரதி ஞாயிற்றுக்கிழமையும் ரஜா நாளாக இருப்பது மன்றி அன்று தினம் கூலியாட்களுக்கும் வண்டிமாடுகளுக்கும் ஓய்வு நாள் இருக்கிறதை உத்தேசித்து இந்திய முதலாளியாகிய ஸ்ரீமான் கா. அ. ச. தாயுமான சுவாமி நாடார் அவர்கள் தமது கடையிலிருக்கும் குமஸ்தாக்களுக்கு 18-3-28 ஞாயிற்றுக்கிழமை தினத்தை ஓய்வுநாளாக முழுமனதுடன் கொடுத்தது பற்றி வியாபாரக் குமஸ்தாக்கள் எல்லோரும் நன்றி பாராட்டுகிறதும் தவிற அவருடைய தயாள குணத்தையும் முன் மாதிரியையும் என்றும் மறக்க முடியாது. அதுபோல் மற்றும் முதலாளிகள் அனைவரும் குமஸ்தாக்கள்மேல் கிருபாகடாக்ஷம்வைத்து பிரதி ஞாயிற்றுக்கிழமையை விடுமுறை யாக்கிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம் என்று ஸ்ரீமான் திரு. மீ. திருநாவுக்கரசு நாடார் எழுதுகிறார்.

## முத்துச் சலாபம்.

தூத்துக்குடித் துறை முகத்தில் நாளது மார்ச்சு மாதம் முதல் முத்துச் சலாபம் நடந்தேறி வருகிறது. வாரத்தில் ஞாயிற்றுக் கிழமை தவிர மற்றைய நாட்களி லெல்லாம் படகுகள் சென்று முத்துக் குளிக்கின்றன. பொதுவாக நாள் ஒன்றுக்கு சிப்பிகள் ரூபாய் 5000 த்துக்குக் கவர்ன்மெண்டுக்கு விற்பனையாகிறதாகத் தெரிகிறது. ஆனால் அவைகளை விலை கொடுத்து வாங்கிப் போகும் வியாபாரிகளாவது, ஏழைகளாவது பெரும்முத்துக்கள் கிடைத்து லாபம் அடைந்ததாகத் துலக்கமாகத் தெரிய வில்லை. எது எப்படிப் போனாலும் பொது ஜனங்கள் பணம் பறி போவதில் குறை வில்லை. கவர்ன்மெண்டாரும் வரும்படி யொன்றையே கருதியவர்களா[illegible] போகலாம், 1000 சிப்பிகள் விலை ரூபாய் 70 முதல், 80 வரை போகிறது. 14—3—28—ல் கீழக்கரை குளியா ளொருவர்முத்துக் குளிக்கும் போது மூச்சுத் திணறி குற்றுயிராய் மேல் கோக்கி வர அவரை எடுத்துக் கரை யேற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லு முன்னர் உயிர் துறந்ததாகச் சொல்லப்படுகிறது.

மற்றும் 16—3—28-ல் காற்று சரியாக வில்லாம லிருந்ததால் தோணிகள் எல்லாம் போக வியல வில்லை. சிலவைகளே சென்று சிப்பி கொண்டு வந்தன. சில இடையில் திரும்பி விட்டன. அதில் ஒரு தோணி கடலில் மூழ்கி விட்டதாகப் பரா பரிப்பேச்சாயிருக்கிறதாம். இதன் விவரம் [illegible] து.

## சென்னை சட்டசபை.

### மாகாண சுயாட்சி வேண்டும்.

### ஸ்ரீ டானியல் தாமஸ் பேச்சு.

மாகாண சுய ஆட்சி அளிக்கப்பட வேண்டுமென்னும் விஷயமாக நடக்கும் விவாதத்தில் தாழ்ந்த வகுப்பினரின் முன்னேற்றத்தைக் கொண்டு வந்து புகுத்துவதும் சரியில்லை யென்பதை நான் தெரிவித்துக் கொள்ளுவேன். தாழ்ந்த வகுப்பினரின் சார்பாகப் பேசியவர்களைவிட எனக்குத் தாழ்ந்த வகுப்பினரெனப் படுவோரின் முன்னேற்றத்தில் சிரத்தைக் குறைவில்லை. மாகாண சுதந்திர மேற்பட வேண்டுமென்பது தேசீய லட்சியமாகும். இதையும் தாழ்ந்த வகுப்பினர் பிரதிநிதித்வத்தையும் குழப்பக் கூடாது. ஒவ்வொரு வகுப்பிற்கும் என்ன ஆசை யிருக்கிறதென்பதைக் கொண்டு மாகாண சுய ஆட்சி வேண்டாமென்று கூறக் கூடாது. நான் ஒரு சிறு வகுப்பைச் சேர்ந்தவன். எங்களுக்கதிகப் பிரதிநிதித்வம் அளிக்கப்படும் படாதென்பதைக் கொண்டு மாகாண சுதந்திரம் வேண்டாமென்று நான் கூறமாட்டேன். தற்சமயமிருக்கும் இரட்டையாட்சி ஒழிய வேண்டுமென்பதே என் கோரிக்கை. இக்கோரிக்கை நிறைவேறி மாகாண சுதந்திரமேற்படுவதே என் வகுப்பினரின் நன்மையைவிட அதிக முக்கியமானது.

இரட்டையாட்சி யென்பது மாறுதலை உத்தேசித்தே ஏற்பட்டிருக்கிறது. அடுத்த மாறுதல் மாகாண சுதந்திர ஆட்சியேயாகும். இப்பொழுதிருக்கும் நிலைமையிலிருந்து நாம் முன்செல்வதா, பின் செல்வதா என்பதை ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும். பின் செல்வதற்குத் தாழ்ந்த வகுப்பினர் கூடச் சம்மதிக்க முடியாது. முன் செல்வதானால் பூர்ண சுதந்திரமே யாதலால் ஒருவித ஆட்சேபனைக்கு மாதாரமில்லை யென்றேற்படுகிறது.

பூர்ண சுதந்திரம் நமக்கேற்படுமாகில் நன்மையைத் தவிர தீமையில்லை யென்பதை நான் ஒரு உதாரணத்தைக் கொண்டு எடுத்துக்கூற விரும்புகிறேன். போலீஸ் படையில் சரி பாதிப்பேர்கள் தாழ்ந்த வகுப்பினரா யிருக்க வேண்டுமென்று இச்சபையில் ஒருவர் சொன்னார். அவ்விதம் நான் இச்சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் கவர்ன்மெண்டார் தற்கால நிலையில் அதன் பிரகாரம் நடக்க மறுப்பார்கள். பொறுப்பு ஆட்சியிருந்து விட்டால், நம் மந்திரிகள் அதன் பிரகாரம் நடக்கப் பாத்தியப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் தாழ்ந்த வகுப்பினரின் நன்மையை உத்தேசித்தும் பொறுப்பாட்சி அவசியமென்றேற்படுகிறது. தற்சமயம் பொறுப்பில் வந்த நிர்வாகம், நடைபெறுவதில் சிறுபான்மையோர் அலட்சியம் செய்யப்படவில்லையா? ஆதலினால் சகலருடைய நன்மையையும் உத்தேசித்து இம் மாகாணத்திற்குப் பொறுப்புள்ள சுயஆட்சி அவசியம். இது சீக்கிரமளிக்கப்பட்டு எல்லா வகுப்பினருக்கும் நியாயமாயுள்ள அபிலாஷைகள் நிறைவேறுமென்று நான் நம்புகிறேன்.



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்தூ வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளை
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஆடு பங்குனி மீ ௧௪ உ

## விசுவாசத் திருட்டு வெளிவந்து விட்டது.

சென்னை மாகாணத்திலும், மற்றுஞ் சில மாகாணத்திலும் சில தான்றோன்றித் தலைகள் சுய நல முற்றி, காங்கிரஸ்ப் போர்வையை மேற்போட்டுக் கொண்டு தேச விசுவாசிகளைப் போல் நடித்து ஜனங்களை ஏமாற்றிச் சட்ட சபைகளில் நுழைத்தும், சர்க்காரை ஏமாற்றி அதிகாரங்களைப் பெற்றும், தேச சமூக சீர்திருத்தங்களைக் காங்கிரஸ் கவனிக்க முடியாமலும், அரசியலை ஏற்பவர்கள் அரசியலை நேரான வழியில் நடத்திக் கொண்டு போக விடாமலும், சதா தொந்தரவும், சூட்சிகளும் செய்து வந்தார்கள்; செய்தும் வருகின்றார்கள். சென்னையில் சுயராஜ்யக் கட்சி யெனும் பார்ப்பனக் கட்சியார், தங்கள் கட்சி தான் தேச விசுவாசக் கட்சி யென்றும், இரட்டை யாட்சிக்கு உயிர் கொடுத்துக் கொண்டு தேசத்துக்குத் துரோகம் செய்து கொண்டு வருவது ஜஸ்டிஸ் கட்சி யே யென்றும் போட்டுவந்த கூச்சலுக்குக்கணக்குக் கிடையாது.

ஜஸ்டிஸ் கட்சியார் தேச நலத்திற்குமுட்டுக்கட்டையாயிருக்கிறார் களென்று மைலாப்பூர்க் கம்பெனியார் வடித்த நீலிக் கண்ணீருக்கும் அளவுண்டா! இவ் வெளிவேஷக்காரர்களாகிய சுயராஜ்யக் கட்சியார் 1926-ல் அமைத்த பினாமி மந்திரி சபைக்கு ஆதரவாயிருந்து கொண்டு, இரட்டை யாட்சியிற் பிரயோசன மில்லை யென ஜஸ்டிஸ் கட்சியார் விட்டு விட்டதைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, தங்கள் பெண்டு பிள்ளைகள் உண்டு கொழுக்க வேண்டி உத்தியோகங்களை அடைந்து வந்தாலும், தாங்கள் தேச விசுவாசிகளென்றும், இரட்டை யாட்சியைத் தொலைப்பதே கடனென்றும் சொல்லிக் கொள்வதில் பின் வாங்க வில்லை. ஆயினும் அவர்கள் சகபாடிகளி லொருவ [illegible] நாதன் சுயராஜ்யக்கட்சியாருடைய விசுவாசத் திருட்டை வெளிப் படுத்திவிட்டார். அதாவது:—

"நாங்கள் 1926—ல் மந்திரி சபை அமைத்த பிறகு காங்கிரஸ்காரர்கள் சில நிபந்தனைக் குட்பட்டு எங்களுக்கு ஆதரவளிப்பதாய் முன் வந்தார்கள். அவர்கள் (காங்கிரஸ்க் காரர்) கூறிய நிபந்தனைகளில் ஒன்று என்னவெனில், மந்திரிகள் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தவர்களை எந்தக் கமிட்டியிலும், ஜில்லா போர்டு முனிஸிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களிலும் அங்கத்தவர்களாய் நியமனஞ் செய்யக் கூடா தென்பதே யாகும்"

என்று உள்ளதை உள்ளவாறு தம்மை யறியாமலே சொல்லி விட்டார். சுயராஜ்யக் கட்சியின் அயோக்கியத் தனத்தையும், திருட்டுத் தனத்தையும் ஏற்கனவே தேச ஜனங்கள் அறிந்து கொண்டு தான் வருகிறார்களென்றாலும், கனம் ரெங்கநாதன், அவர்களுடைய இழி தொழிலைச் சரியானபடி தெளிவு படுத்தி விட்டார். பதவி யெனும் குற்றயிரா யிருக்கும்போது இவைகளைக் கூறுவிடினும் அம் மயக்கம் தெளிந்த பிறகாவது உள்ளதைக் கக்கி விட்டார். அதைப் பற்றி ஒருவரும் நகைக்க வேண்டியதில்லை.

கௌஹத்திக் காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோதமாக இரட்டை யாட்சிக்குப் பக்கத்திலிருந்து உதவி செய்திருக்கும் திரு. மூர்த்தி கூட்டத்தாருக்கு, கனம் பனகல் ராஜா அவருடைய கட்சித் தீர்மானத்துக்குவிரோதமாகப்புது மந்திரி சபையை ஆதரிக்கிறா ரென்று குறை கூறுவதற்கு யோக்கியதை தானுண்டா? அதைப்பற்றிப் பேசுவதற்காவது வாய்தா னுண்டா வென்று கேட்கின்றோம். பிற்போக்குள்ள ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிகளாக வந்து விடாமல் காப்பதற்கே பினாமி மந்திரிகளை ஆதரிப்பதாகக் கத்திய திரு. சத்திய மூர்த்தி, கனம். பனகால்ராஜா மீது ஏன் பாய வேண்டும்? ஜஸ்டிஸ் கட்சி எப்போதும் ஒத்துழைப்புக் கட்சியே யன்றி முட்டுக் கட்டைக் கட்சியே யல்ல. முட்டுக் கட்டைக் கட்சியாரை மந்திரி பதவி ஏற்கும்படி "தமிழ் நாடு" பத்திரிகை தூண்டியும் அதற்கு இணங்காதவர்கள் போல் பாசாங்கு பண்ணிக் கொண்டே ஜஸ்டிஸ் கட்சி எடுத்தெறிந்த எலும்பை மறைவிலிருந்து ஏன் கவ்வ வேண்டும்? அதில் ரசமில்லை என்று ஏன் சொல்ல வேண்டும்? சதுரங்க ஆட்டத்தில் மகா நிபுண ரென்று போற்றும் கனம். ராஜா அவர்கள் லார்டு கோஷன் ஆடிய ராஜீயச் சதுரங்கத்தில் வெற்றி பெற்று விட்டாரென்று திரு. சத்திய மூர்த்தி கூட்டமும், அவர்களது பத்திரிகையும் அடையும் பொறாமையைப் பற்றியாவது செய்யும் சூட்சியைப் பற்றியாவது தேசம் இனி லட்சியம் செய்யப் போவ தில்லை.

தேசத்துக்குத் துரோகம் செய்ததும், செய்கிறதும் சுயராஜ்யக் கட்சியா, ஜஸ்டிஸ் கட்சியா வென்று திரு. மூர்த்தி கூட்டத்தார்களே மூக்கில் விரலை வைத்து நோக்கட்டும்.

"நுண்ணிய நூல் பல கற்பினு மற் [றுந்தா
[illegible]"

எனும் வுழை மறந்து வுளை யிடுவதில் ஒரு பிரயோசனமுமில்லை யென்பதை இனியேனும் சுயராஜியக் கட்சியார் உணர்ந்து பேசுவார்களா, நடப்பார்களா?

---

## அந்தோ விண்ணுற்றார்!

அருப்புக்கோட்டையில் பிரபல குடும்ப வழித்தோன்றலும், நாடார் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து நின்றவரும், மகாத்மா காந்தியடிகளாரின் வழி பற்றி முன் மாதிரியாக நடந்து காட்டிய வரும், நமது "நாடார் குல மித்திரன்" ஆபீஸ் மானேஜர் பதவி வகித்து நான்கு வருடம் அதி திறமையோடு சமூகத் தொண்டாற்றியவருமான வாலிப திலகம் திருவாளர். பெ. திருமேனி நாத நாடார் அவர்கள் தம தில்லத்தில் ஒருவாரமாகத் தேக அசௌகரியமா யிருந்து தமது 27—வது வயதில் 23—3—28 வெள்ளிக் கிழமை மாலை 5மணிக்கு உற்றாரும், பெற்றாரும், ஊராரும், நண்பர்களும் ஆகுலித்து நிற்ப அந்தோ விண்ணுற்றார்! ஆறாத் துயரம்!! அடங்காத் துக்கம்!!!

ஏழைக் கிரங்குபவராய், எளியர்க் குபகாரியாய், பெரியார்க்குறு துணைவராய், யாவர்க்கும் அன்பராய், எவர்க்கும் தோழராய், பகை வரும் நகை முகங் கொள்ளுமாறு இன் சொற் பொழியும் இயல்புடையோராய் அவ் வக் காலங்களில் பல பொது ஸ்தாபனங்களைப் பொறுப் பேற்று நடத்தி வந்த இவர்களுடைய திறமை வாய்ந்த—ஆற்றல் மிகுந்த—ஆர்வந் ததும்பிய—அதி தீவிர முற்போக்குடைய ஊழியம் என்றென்றும் மறக்கற் பாலதன்று.

இவர்கள் இவ்வளவு சொற்ப வயதில் நினையாத, செய்யாத பொது ஜன முன்னேற்ற சாதனமெதுவும் உண்டோ வெனத் திகைப்புறத் தக்கவாறு அவ்வளவு மகத்தான அரிய பெரிய சேவையை, ஊழியத்தை யாருக்காக? தமக்காக வல்ல, தமது குடும்பத்தாருக் கல்ல, பின் யாருக்கு? தனக்கென வாழாப் பிறர்க் குரியாளராய் பொது ஜன க்ஷேமங் கருதிப் புரிந்திருத்தல் இன்றும் என்றும் அவர் பேர் சொல்லும், சொல்லும்.

மாணவ வாழ்க்கை முதல் இவர் ஆற்றி வந்த பல குறிப்பிடத்தக்க சம்பவ மொவ் வொன்றும் அவர்களின் குணநிறை சயத்துக்கும், மனப் பான்மைக்கும் எடுத்துக் காட்டாக நின்று எமது உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது. தமது பள்ளிப் பருவத்தில் குறிப்பிடத் தக்க மாணவ திலகமாய் ஜோபித்து இந்திய விளையாட்டுகளில் கவர்ன்மெண்டின் நன் மதிப்பிற் குரியரா யிருந்தார். அக் காலத்திலே சங்கங்களிலும், பொதுக் காரியங்களிலும் மிகுந்த சிரத்தை யுண்டு. பள்ளியி னின்றும் நீங்கிய ஓராண்டில் நமது மித்திரன் காரியாலயத்திற் சேர்ந்து நான்கு வருடங்கள் வரை மானேஜர் பதவி வகித்து சமூகத் தொண்டாற்றி பல விதத்திலும் பத்திரிகையைச் சிறப்புறச் செய்து ஜனங்களின் பிரியத்திற்குரியவரா யிருந்தா ரென்பதை பாரே யறியார்? அன்றிருந்து இன்றளவும் "திருமேனி நாதன்", "P. T.", "P. Tr. மேனி நாதன்", "நாதன்" முதலிய புனைப் பெயர் தாங்கி வெளிவந்த கட்டுரைக ளத்தனையும் அவரது போற்றுதற்குரிய அபிப்பிராயங்களே என்பதை ஈண்டு குறிப்பிடுகிறோம்.

மலையாளத்தைச் சேர்ந்த வைக்கத்தில் உள்ள தேவாலயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் செல்ல வேண்டு மென்ற காரணத்தைக் கொண்டு நடத்தி வைக்கப் பெற்ற சத்தியாக்கிரக இயக்கத்தில் வடநாட்டில் ஈடுபட்டவர் நமது சமூகத்தில் யாரேனும் உளராவெனின் அது நமது திருமேனி நாதரே என்போம். மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டமான தீண்டாமை விலக்கில் இவர் சாதித்தது இதொன்றுமட்டு மல்ல; போதிய சாதன மில்லா திருந்துங் கூட ஒருஆதித்திராவிடப் பையனை சில காலம் ஊணும், உடையும் கொடுத்து தமது அருகில் வைத்து போஷித்து வந்தார், மற்றும் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் சென்று அவர்களுக்கு முன்னேற்ற சாதனம் பற்றி இதமான சொற் பொழிவு நிகழ்த்தி பல கூட்டங்கள் கூட்டியிருக்கிறார். என்னே கருணை! எவ்வளவு விரிந்த நோக்கம்!! எத்துணை பரந்த கொள்கை!!! அம்மம்மா சமரஸக் கருத்து எம்மட்டும் ததும்பி நின்றது!

பரோபகார வைராக்கிய சித்தராய இன்னார் உள்ளங்கசிந் துருகிய மனத்தினராய் விளங்கி பிற ஜீவன்களிடத்தும் காருண்யம் கொண்டு தமது உள்ளத்தைப் பெரிதும் பல காலும் கவர்ந்தவாறு கொலை மறுத்தலுக்காகப்பட்டபாடு தான்—நினைத்த நினைவுதான்—கொண்ட கொள்கைதான் எழுதவும் தரமன்று. கொலை மறுத்தற் பிரசாரத்தை உருவாக்கி, சென்றவாண்டில் அதற்காக ஒரு வாரம் உண்ணாவிரதம் அனுஷ்டித்த உத்தமர் இவர். தைரியமும் மனோதிடமும் நிரம்பப்பெற்ற வாலிபச் சிங்கமெனக் கூறினும், ஏற்பதற்கான அத்துணை பெருமை வாய்ந்த நமது நாதன் ஊழி யூழி காலம் ஆலயம் தொழுதலிற் கடமைபூண்டவர். பல சாதுக்கள் தெரிசனம் பெற்றவர். சந்நியாச வாழ்க்கையிற் பிரியராயிருந்த பிரம்மச்சாரி. குடும்ப வாழ்க்கையிலுள்ள கஷ்டங்களைப் பல காலும் சொல்லி ஆற்றி அதினின்றும் விலகி வந்த இவர் தமது அந்திய காலத்திலும் 19-3-28-ல் வெளிவந்த நமது மித்திரனில் "பெற்றோர்களின் கொடுமையும், வாலிபர்களின் அடிமையும்" எனும் தலைப்புடன் தீட்டியிருப்பதை நோக்க அவ்வகைச் சங்கடம் அவர் மனதிற் சமாதானம் அடைந்தில போலும்.

பெற்றோரும் உடற்பிறப்பாளரும் பேதலித்துப் புலம்ப உற்றாரும் உறைவின் முறையாரும் ஆவி சோர்ந்து துடிதுடிக்க இந்நகர் வாசிகள் கண்டு கண்ணீர் சொரிய அன்று நள்ளிரவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இறைவனது திருவடியில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## செய்தித் திரட்டு.

சென்னைச் சட்டசபையில் புதிய மந்திரிகளான ஸ்ரீமான்கள் முத்தையா முதலியாரும், சேதுரத்தினமய்யரும் முதன் முதல் நுழையும் போது "வெட்கம், வெட்கம்" "துரோகிகளே வெளி யேறுங்கள்" என்று சுயராஜ்யக் கட்சியார் பெருஞ் சத்தம் செய்தனராம்.

* *

இந்திய சட்ட சபையில் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிய விவாதத்தின் போது உப்பு வரியையும், தபால் விகிதங்களையும் குறைக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட பிரேரபணைகள் தோல்வியடைந்தன.

* *

மணியாச்சியில் ஒருவன் தனது 20 வயதுள்ள இரண்டாவது மனைவியின் கடத்தையில் ஐயுற்று அவளை மருந்து சாப்பிட அழைத்துப் போவதாகக் கூறி, திருநெல்வேலியை யடுத்த சிவலப்பேரியிலுள்ள ஒரு கள்ளிப் புதரில் கொன்று போட்டு விட்டானாம்.

* *

மத்திய மாகாண மந்திரி கனம். இராகவேந்திர ராவ் பங்களாவில் சென்ற 13௳ இரவு சட்டசபை அங்கத்தவர்களான திரு. பர்க்காவும், திரு. போசும் தூங்கிக் கொண்டிருக்கையில் எவனோ கள்வன் அவர்கள் உடைகளையும், ஒரு கைத் துப்பாக்கியையும் திருடிச் சென்றானாம்.

* *

தென் காசித் தாலுகா வடக்கு மலைநீன் கீழகிருஷ்ணப்பேரி யிலிருக்கும் கி. ரா. ராமசாமி செட்டியாரும், மகன் பொன்னையா செட்டியாரும் இன்சால்மெண்ட் மனுக் கொடுத்திருந்ததை திருநெல்வேலி அவிஸ்டெண்டு சப்கோர்ட்டாரவர்கள் 12—3—28ல் தள்ளி விட்டார்கள்.

* *

தென்காசித் தாலுகா பாவூர்சத்திரம் வகுணியை மராமத்துச் செய்யும் போது பழய கல்லொன்று எடுக்கப்பட்டது. அதில் சம்ஸ்கிருதத்தில் எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருக்கின்றனவாம்.

* *

கொளும்பு கொள்பிட்டி 37-ம் கிர். கட்டடத்திலிருந்த ஸ்ரீமான் எஸ். பி. ஆசிர்வாத நாடார் அவர்களின் வியாபார ஸ்தலத்தை விஸ்தீரண அதிகரிப்புக்காக 84 கிர். கட்டடத்திற்கு அதிசிறப்புடன் மாற்றி யிருக்கிறது.

* *

கிலக்கோட்டையில் நடந்த யூனியன் போர்டு எலெக்ஷனில் மகா-ா-ா-ஸ்ரீ களான கே. ஆர். எம். என். சுப்புராயலு அய்யர், கே. வ. காளியப்பநாடார், எஸ். வி. எஸ். சன்னாசி செட்டியார், கே. கே. கருப்பையா பத்தர், வ. வி. என். ஆறுமுகம் செட்டியார் ஆகிய கனவான்கள் தேர்ந் தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள்.

* *

கொழும்பு பாணந்துறை நாடார்கள் விஷயமாய்க் கையொப்ப மில்லாக் கடித மொன்று நமக்கு வந்திருக்கிறது. பொறுப்பற்றிருக்கும் அக்கடிதத்தை பத்திரிகையில் பிரசுரிக்க இயலாமலிருக்கிறது. (ப-ர்)

* *

ஹைதராபாத்தில் உண்டான பூகம்பத்தால் சுமார் 6000 மைலுக்கு அதிர்ச்சி ஏற்பட்டதாய்த் தெரிகிறது.

* *

பார்வா பட்டணத்தின் தாரிமஹால் அரண்மனையில் இந்தூர் ராஜா சர்துக்கோஜிராவுக்கும் (ஸ்ரீமதி மில்லரான) சன்மிஷ்டா தேவிக்கும் நடந்தேறிய விவாகத்துக்கு சுமார் 25000 பேர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள்.

* *

பெண் உடைதரித்து கோஷாவைப் போல் ரயில் வண்டியில் பிரயாணஞ் செய்த கும்பகோணம் லோகநாத ஆசாரி என்பவருக்கு இரண்டு வருஷ கடுங்காவல் தண்டனையும், இரண்டு வருஷம் போலீஸ் கண் காணிப்பில் இருக்கவேண்டிய தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது.

* *

பம்பாயிலிருந்து புறப்பட்டு 4½ வருஷங்களாக மூன்று வாலிபப் பார்ஸியர்கள் உலகத்தில் [illegible] 45000 மைல் தூரம் சைக்கிளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு 18-3-28-ல் காலை பம்பாய் வந்து சேர்ந்தார்களாம்.

* *

அமெரிக்காவிலுள்ள சில ஹோட்டல்களில், இந்தியர்கள், ஜப்பானியர்கள், சீனர்கள், நாய்கள், பூனைகள் முதலியவை அனுமதிக்கப்படுவதில்லை யென நோட்டீஸ் ஒட்டப்பட்டிருக்கிறதாம்.

* *

சர். துக்கோஜிராவ், சன்மிஷ்டா தேவியுடன் கூடிய சீக்கிரத்தில் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுச் செல்வார்.

* *

கல்கத்தாவுக் கருகிலுள்ள செட்டாலாவில் ஒரு அரிசிக்கிடங்கில் தீவிபத்து ஏற்பட்டு 12000 அரிசி மூடைகள் எரிந்து போய்விட்டன.

* *

லண்டன் டயர் மேமோரியல் கமிட்டியாரும், டயர் மனைவியும்பஞ்சாபில் படு கொலை புரிந்த படுபாவி ஜெனரல் டயர் புராணம் எழுத வேண்டுமென்று ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்களாம்.

* *

பிலையாறு, நாடார் உயர்தர பாடசாலை மாணவர் சங்கத்தின் 18-வது ஆண்டுவிழா 17-3-28 ல் சிதம்பரம் மீனாக்ஷி கல்லூரி ஆசிரியர், திரு. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

* *

மதுரை வடக்கு சிங்கத் தெருவில் முகமதிய சொருவர் வீட்டில் 22-3-28 ல் பகல் 8-மணிக்கு தீ உண்டாகி, 38 வீடுகளையும் மசூதி ஒன்றையும் சாம்பலாக்கிற்று. 70 குடும்பத்தார்கள் தங்க இடமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

* *

சென்னை சட்டசபை உபதலைவர் டாக்டர். ஸ்ரீமதி முத்து லக்ஷிமி ரெட்டி சுரத்தால் பீடித்திருப்பதால் ஒரு வாரம் வரை எவ்வித வேலைகளையும் கவனிக்க முடியாதென்று தெரிகிறது.

* *

மாயவரம் ஜில்லா போர்டுமெம்பரும் மாஜி முனிஸிபல் சேர்மனும் பிரபல மிராசுதாருமான ஸ்ரீமான் என். டேவிட் நாடாரவர்கள் தமது இல்லத்தில் சில நாட்களாக வியாதியாயிருந்து 21-3-28 ல் மாலை உயிர் துறந்தார்கள்.

* *

சென்னை சிடன்ஹாம்ஸ் ரோட்டிலுள்ள ஒரு ஹோட்டலில் தின்னும் இட்டலியில் கொட்டும் தேள் செத்தது [illegible] கண்டு திடுக்கிட்டார். செய்தி போலீஸ் சப் இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்து ஓட்டலிலுள்ள இட்டலிகளை எல்லாம் குப்பைத்தொட்டியில் எறிந்து விட்டார். விசாரணை நடந்து வருகிறது.

* *

அருப்புக்கோட்டை, தேவமார்கள் மடத்தில் 21-3-28 ல் சாத்தூர் யூனியன் போர்டு பிரஸிடெண்டும், வக்கீலுமான திரு. கந்தசாமி முதலியார் பி. ஏ. அவர்களால் திருவள்ளுவரும் சமயமும், என்பதைப்பற்றி உபந்நியாசம் நிகழ்த்தப்பட்டது.

## சேர்மாதேவி தாலூகா போர்டு எலெக்ஷன்.

### ஸ்ரீமான் த. பி. சொக்கலால் வெற்றி.

(ஒரு நிருபரிடமிருந்து.)

ஷை போர்டு அம்பாசமுத்திரம் தாலுகா, பாப்பான்குளம் டிவிஷனில் 3 ஸ்தானங்களுக்கு முதலியார் 2 நாடார் 2 பிராமணர் 1 மகமதியர் 1 ஆகிய அறுவர்களுக்குள் போட்டியானது வெகு பலமாயிருந்தது. மொத்தம் ஓட்டர்கள் 2200. இதில் நாடார் ஓட்டர்கள் 570. அபேட்சகர்கள் தங்களின் நோக்கம் ஜெயம் பெறுவதற்கு சகல வழிகளிலும் பிரயத்தனம் செய்தார்கள். நாடார் மக்களின் ஓட்டுகளை பலவிதத்திலும் இதரகுல அபேட்சகர்கள் பல வந்தம் செய்து நாடார் குல அபேட்சகர்களுக்கு ஓட் போடுவதற்குரிய நிலைமையில்லாத முறையில் பிரசாரம் செய்தார்கள். ஸ்ரீமான் த. பி. சொக்கலால் அவர்களும் மதுரை நாடார் மகாஜன சங்கம் ஏஜண்டு ஸ்ரீமான் எ. எம். எஸ். அண்ணாமலை நாடார் அவர்களும், நாடார் குல ஓட்டர்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று நாடார் அபேட்சகர்கள் ஜெயம் பெறுவதற்கு வெகு தீவிரமாய்ப் பிரசாரம் செய்தார்கள். 17—3—28-ல் எலெக்ஷன் நடைபெற்றது. அன்று தினம் நாடார் வாலண்டியர்கள் ஏராளமாய்ப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 20-3-28-ல் ஓட்டுகளை எண்ணிப்பார்த்ததில் ஸ்ரீமான்கள் த. பி. சொக்கலால், (முக்கூடல்) ராமலிங்க முதலியார் (ஆள்வார்குறிச்சி) சண்முகசுந்தர முதலியார் (பாப்பான்குளம்) ஆக மூன்று பேர்கள் ஜெயம் பெற்றார்கள்.

அகால மரணமான திருவாளர்

## பெ. திருமேனிநாதர் அவர்கள் பேரில் இரங்கற்பா.

(பாரெங்கும் புகழ் பெற சரபம்—என்ற மெட்டு.)

(1) பாரெங்கும் புகழ் திருமேனி
பாண்டிக் குலம் வளாபிமானி
பேர் தங்கும் பிரபலங்யானி
பேரின்பக் கரை கண்ட ஞானி

(2) காலைப்பருவத் திருமேனி
காமக் கடல் நீத்த மெய்ஞ்ஞானி
தோழர்க் குபகாரப் பெருமனி
அறிக்குத் தெய்வத் திருமேனி

(3) தானம் தயை சாந்தம் பக்தி
தங்கிப் புகழ் பொங்கிய மூர்த்தி
ஞானத் திருமேனி யுன் கீர்த்தி
நாடெங்கணுமே பிரசித்தி.

(4) கதாடை கட்டிய மேனி
காந்திப் புகழேந்திய மேனி
அதிரூபச் சுந்தர மேனி
அன்பிற் கனி கலதிரு மேனி.

(5) தேசத் தொண்டாற்றிய மேனி
தேர்ச்சி பெற்றோங்கிய மேனி
பூஜிக்கும் புகழ்த் திருமேனி
புகுந்தாயோ பொன்னுலகம் நீ.

## ஸ்ரீ முத்துச்சாமி கவிராயர் குருபூஜை.

உடுமலை சரபம் முத்துச்சாமிக் கவிராயரவர்கள் இயல் இசை நாடக மெனும் முத்தமிழ்த் தேர்ச்சியில் பெருங் கீர்த்திபெற்று ஆசு, மதுரம், சித்திரம் வித்தாரமென்னும் நாற்கவியில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை, யெனப் பெயர் வாங்கி சந்தத்தில் சரபமாய் வண்ணக்களஞ்சியமாய் உலவி புவிராஜர்களாலும் கவிராஜர்களாலும் எற்றிப் போற்றப் பெற்றாரென்பது உலகறிந்ததொன்று. இவர்கள் தமது 60-வது வயதில் குரோதன ஞூ சித்திரை மீ 13 உ திருவாரூரில் சமாதி நிலையடைந்துவிட்டதால் அது முதல் வருடந்தோறும் பலரின் பொருளுதவிபெற்று குருபூஜை நடத்தி வருகிறோம்.

அதே போன்று வரும் 25-4-28ல் திருவொற்றியூரில் நடைபெறவிருக்கும், நமது கவிராயர் அவர்கள் குருபூஜைக்கு அன்று அடியார்களுக்கு நடக்கும் அன்னதான தர்மத்திற்கும் பொருளுதவி புரிந்து குருபூஜைக்கு விஜயம் செய்து ஆதரிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். பொருளுதவி செய்வோர் மதராஸ் ஜி. டி. நெ 91. அண்ணாபிள்ளை வீதி. டி. என். கோவிந்தசாமி நாயுடு என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

## மந்திரி ரெங்கநாத முதலியார் பிற்போக்கு.

பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த முதலியாருக்கு பிரம்மஞானத்தை பற்றிச் சிந்திக்கக்கூடிய வல்லபமிருக்குமானால் ஜீவர்கள் எல்லாம் பிரமம் என்ற தெளிவு உண்டாகி மனிதர்களை துவேசிக்கும் குணம் நீங்கும்.

மனிதருக்கு மனிதர் தாழ்வில்லை என்ற எண்ணம் இருக்குமானால் இந்து தேவஸ்தானத்துக்கு இந்து மத நாடார்களை அங்கத்தினர்களாக நியமிக்க, மற்றவர்களை யோசனை கேட்கும் அறியாமை நீங்கும்.

மனிதரில் யாவரும் சகோதரர்களே என்ற உண்மை ஞானம் அறிந்திருப்பாரானால் சிலரை மனிதர்களென்று மதிப்பதற்கு சிலரை யோசனை கேட்கும் பயங்கொள்ளித்தனம் நீங்கும்.

மேல்கண்ட மூக்குணங்களும் நீங்காத முதலியார் எந்த ஞான சபையிலும் எந்த நீதி சபையிலும் சேர்ந்து அவருடைய மனச்சாந்திக்காவது நம் தேசத்துக்காவது பாடுபட எப்படி முடியும்? பாவம்! அவர் என்ன செய்வார். அவர் புத்திக்கெட்டியயோசனை அவ்வளவுதான். (சென்னை மாகாணத்தில் இந்துக்கள் சண்டையை குறைக்கத்தகுந்த புத்திசாலிகள் ஒருவருமில்லை) பிரம்மஞானமே! உன்னை அடுத்தவர் இருதயத்தில் நன்றாய் பிரகாசித்துக் காட்டுவாயாக.

மீ. சி. சுந்தரநாடார்,

11

தஞ்சாவூர் தேவஸ்தானக் கமிட்டியார் சென்ற மாதம் 18௳ நடைபெற்ற கமிட்டி கூட்டத்தில் நாடார்களை தேவஸ்தானக்கமிட்டி அங்கத்தவர்களாய் நியமனம் செய்வது மத விரோதமென்று தீர்மானித்திருப்பதாகப் பத்திரிகைகள் மூலம் தெரிய வருகிறது.

முன்னர் அதே தேவஸ்தானத்தில் நாடார்கள் கமிட்டி அங்கத்தவர்களாய் இருந்துவந்தவர்களை மறந்து முன்னுக்குப் பின் முரணாகத் தீர்மானம் செய்திருப்பது குருட்டுத்தனமென்றே சொல்லவேண்டும். இன்றேல் இவ்விதம் செய்ய நீதிவழி வேறில்லவேயில்லை.

மனிதர் யாவர்க்கும் பொதுவான தேவாலயத்தின் முந்திய வழக்கத்திற்கு மாறாகவும் தன்னயப் பித்தம்பிடித்து ஊர்ச் சொத்தை தின்று எப்பமிடும் எண்ணங்கொண்டும் இவ்வாறு தீர்மானித்திருப்பது விந்தையின்று. கொடுங்கோல் மன்னர்வாழும் நாடினும் கடும்புலிவாழும் காடு நன்றே என்பதற்கொப்ப வன்கனாளர் நிறைந்த அக்கமிட்டியின் மேற்பார்வையில் அத்தகைய தேவஸ்தானங்களிருப்பதைப் பார்க்கிலும் இல்லாது ஊடப்படினும் சாலும்.

க. ப. மா. வேள்ளையா நாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

### ஆறாம் அத்தியாயம்.

#### ஆரம்பப் போராட்டம்.

சென்ற அத்தியாயங்களில் இந்தியரின் நிலைமையைப்பற்றி ஆராய்ந்தபோது, அவர்கள் தங்கள் மீது விடுக்கப்பட்ட அம்புகளை எவ்வாறு எதிர்த்து நின்றார்கள் என்பதும் சிறிது சொல்லப்பட்டது. ஆனால் சத்தியாக்கிரகத்தின் ஜனனத்தைப்பற்றி வாசகர்கள் நன்கு தெரிந்துகொள்ளும் பொருட்டு, அதற்கு முந்திய காலத்தில் இந்தியர் நலங்களைப் பாதுகாக்கச் செய்யப்பட்ட முயற்சிகளைத் தனிப்பட எடுத்துக் கூறுதல் அவசியமாகிறது.

1893-ம் ஆண்டுக்கு முன்பு தென்னாப்பிரிக்காவில் இந்தியர் கட்சியை எடுத்துப் பேசக்கூடிய படித்த, சுதந்திர இந்தியர்கள் எவருமில்லையென்றே சொல்லலாம். ஆங்கிலந்தெரிந்த இந்தியர்கள் பெரும்பாலும் குமாஸ்தாக்களாயிருந்தனர். அந்தத் தொழிலுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு ஆங்கில ஞானமே அவர்களுக்கு இருந்தது. விண்ணப்பங்கள் தயாரிப்பதற்கு வேண்டிய பாஷா ஞானம் அவர்களுக்கில்லை. மற்றும் அவர்கள் தங்கள் காலம் முழுவதையும் முதலாளிகளுக்கே தரவேண்டியவர்களாயிருந்தனர். ஆங்கிலம் படித்த மற்றோர் இந்திய வகுப்பார் தென்னாப்பிரிக்காவில் பிறந்து வளர்ந்தவர்களாவர். இவர்கள் பெரும்பாலும் ஒப்பந்தத் தொழிலாளரின் சந்ததிகள். அவர்களில் மேற்படி வேலைக்குத் தகுந்தவர்கள் இருப்பினும் பயனில்லாமலிருந்தது. ஏனெனில் அவர்கள் நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளராக அரசாங்க உத்தியோகங்களிலிருந்தனர். எனவே அவர்கள் தங்கள் உடனுணர்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதையன்றி மற்றப்படி இந்தியரின் கட்சிக்கு உதவி செய்ய இயலாதவர்களாயிருந்தனர்.

மேலும், ஒப்பந்தத் தொழிலாளிகளும், ஒப்பந்தம் நீங்கிய தொழிலாளிகளும் பெரும்பாலும் ஐக்ய மாகாணத்தையும் சென்னை மாகாணத்தையும் சேர்ந்தவர்கள். சுதந்திர இந்தியர்களில் மிகப் பெரும்பான்மையோரான முஸ்லிம் வியாபாரிகளும், இந்து குமாஸ்தாக்களுமே முன்னமே சொல்லப்பட்டது போல், குஜராத்திலிருந்து வந்தவர்கள். இவர்களையல்லாமல் சில பார்ஸி வியாபாரிகளும் குமாஸ்தாக்களும் இருந்தார்கள். ஆனால் தென்னாப்பிரிக்காவில் பார்ஸிகளின் ஜனத்தொகை எல்லாங்கூடி 30, 40-க்கு மேல் இராது. சுதந்திர இந்தியர்களுக்குள் நாலாவது வகுப்பார் சிந்திய வியாபாரிகள். இவர்கள் ஏறக்குறைய 200 பேர் இருந்தனர். இந்தியாவுக்கு வெளியே சிந்தியர் எங்கெங்கே குடியேறினாலும் அங்கெல்லாம், பட்டு, சரிகைப் பூ வேலைத் துணிகள், வேலைப்பாடான கருங்காலி மரப்பெட்டி, சந்தனமரம், தந்தம் முதலியவற்றாலான சாமான்கள் ஆகிய இவை விற்போராயிருந்தனர். இவர்களுடைய வாடிக்கைக்காரர்கள் பெரும்பாலும் வெள்ளைக்காரர்களாவர்.

ஒப்பந்தத் தொழிலாளரை வெள்ளைக்காரர் "கூலிகள்" என்று அழைத்தனர். "கூலி" என்றால் சாமான் தூக்குபவன் (போர்ட்டர்) என்றே பொருள். ஆனால் இப்படி அழைத்தல் மிகவும் சாதாரணமாகப் போய் விட்டபடியால் ஒப்பந்தத் தொழிலாளிகள் தாமும் தங்களைக் "கூலிகள்" என்றே சொல்லிக்கொள்ளத் தொடங்கினர். நூற்றுக்கணக்கான வெள்ளைக்காரர் இந்திய வக்கீல்களைக் "கூலி வக்கீல்" என்றும், இந்திய வியாபாரிகளைக் "கூலி வியாபாரி" என்றும் அழைக்கலாயினர். இதில் அவமதிப்பு ஏதேனும் உண்டென்று அறியாத வெள்ளைக்காரர் சிலரும் உண்டு. ஆனால் பெரும்பாலோர், வேண்டுமென்று அவமதிக்கும் நோக்கத்துடனேயே அப்பதத்தை உபயோகித்தனர். ஆகையால் சுதந்திர இந்தியர்கள் ஒப்பந்தத் தொழிலாளிகளிடமிருந்து தங்களை வேறுபடுத்திக்கொள்ள முயன்றார்கள். இதன் காரணமாகவும், இன்னும் இந்தியாவிலுள்ள நிலைமையினால் உண்டான காரணங்களாலும், தென்னாப்பிரிக்காவில் ஒப்பந்தத் தொழிலாளிகள், ஒப்பந்தம் நீங்கிய தொழிலாளிகள் அடங்கிய வகுப்புக்கும், சுதந்திர இந்தியர்களுக்கும் வித்தியாசம் கற்பிக்க முயற்சி செய்யப்பட்டது.

சுதந்திர இந்தியர்கள் சிறப்பாக முஸ்லீம் வியாபாரிகள்-மேலே கூறிய அநீதிகளை எதிர்த்து நிற்க முயன்றார்கள். ஆனால் இம்முயற்சியில் ஒப்பந்தத் தொழிலாளிகள் ஒப்பந்தம் நீங்கிய தொழிலாளிகள் என்னும் வகுப்பாரின் ஒத்துழைப்பைப்பெற நேரான பிரயத்தனம் எதுவும் செய்யப்படவில்லை. அவர்களுடைய ஆதரவைப் பெறவேண்டுமென்னும் எண்ணமே எவருக்கும் உதயமாகவில்லை போலும். ஒருவேளை உதயமாகியிருந்தாலும், அவர்களைத் தங்கள் இயக்கத்தில் சேரவிட்டால் நிலைமை இன்னும் கேடாகும் என்னும் அபிப்பிராயம் அவர்களுக்கு இருந்து வந்தது. முக்கியமாக, சுதந்திர வியாபாரிகள் மீதே பாணம் தொடுக்கப்படுகிறதென்று எண்ணப்பட்ட படியால், பாதுகாப்பு முயற்சிகளும் அந்த வகுப்பாரின் அளவிலேயே நின்று வந்தன. சுதந்திர இந்தியர்களுக்கு ஏற்பட்டிருந்த பலக் குறைவு இதுமட்டுமன்று. அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது; இந்தியாவில் பொது ஊழியம் செய்த அநுபவமும் அவர்களுக்கில்லை. இவைகளையெல்லாம் உத்தேசிக்கும்போது அவர்கள் தங்கள் கஷ்டங்களை எதிர்த்துத் தீரத்துடன் போராடினார்கள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் வெள்ளைக்கார பாரிஸ்டர்களின் உதவியை நாடி, அவர்களைக்கொண்டு விண்ணப்பங்கள் தயாரித்து அனுப்பினார்கள். சில சந்தர்ப்பங்களில் பிரதிநிதிக் கூட்டங்களை அனுப்பி அதிகாரிகளைப் பேட்டி காணச் செய்தார்கள்; இன்னும் நிலைமையைச் சீர்படுத்தத் தங்களாலியன்ற முயற்சி செய்தார்கள். 1893-ம் ஆண்டுக்கு முன்வரை இருந்த நிலைமை இதுவேயாகும்.

வாசகர்கள் சில முக்கியமான தேதிகளை நினைவில் வைத்துக்கொண்டால் இச்சரித்திரத்தைப் படிப்பதற்கு உதவியாயிருக்கும். 1893-ம் வருஷத்துக்கு முன்பு ஆரஞ்சு பிரீஸ்டேட்டிலிருந்து இந்தியர்கள் துரத்தப்பட்டு விட்டனர். டிரான்ஸ்வாலில் 1885-ம் வருஷத்து 3-வது சட்டம் அமுலிலிருந்தது. நேட்டாலில் ஒப்பந்தத் தொழிலாளிகளை மட்டும் அங்கே தங்கும்படிவிட்டு மற்றவர்களைத் துரத்தி விடுவதற்கான சட்டங்கள்செய்வதுபற்றி ஆலோசிக்கப்பட்டுவந்தது. இதற்காகவே பொறுப்பாட்சியும் பெறப்பட்டிருந்தது.

1893-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் நான் இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்குப் பிரயாணமானேன். அங்குள்ள இந்தியர்களின் பூர்வ சரித்திரத்தைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. முற்றும் தொழில் முறையிலேயே நான் அங்குச் சென்றேன். போர் பந்தரைச் சேர்ந்த மேமான் முஸ்லீம்களின் பிரபல கம்பெனி ஒன்று டர்பனில் தாதா அப்துல்லா கம்பெனி என்னும்பெயருடன்வியாபாரம் நடத்தி வந்தது. அவ்வளவு பிரபலமுள்ள மற்றொரு போட்டிக் கம்பெனி பிரிடோரியாவில் தயேப் ஹாஜிகான் முகமது கம்பெனி என்னும் பெயருடன் வியாபாரம் செய்து வந்தது. துரதிஷ்ட வசமாக இந்தப் போட்டிக் கம்பெனிகளுக்குள் ஒரு பெரிய வழக்கு ஏற்பட்டு நடந்து கொண்டிருந்தது. போர்பந்தரிலிருந்த தாதா அப்துல்லா கம்பெனியின் கூட்டாளி ஒருவர் என்னை அமர்த்தித் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பினால் மேற்படி வழக்குக்கு உதவியாயிருக்கும் என்று கருதினார். நான் அப்போதுதான் பாரிஸ்டராகப் பதிவு செய்துகொள்ளப்பட்டிருந்தேன். தொழிலுக்கு முற்றும் புதியவனாயிருந்தேன். ஆனால் நீதிமன்றத்தில் வாதாடுவதற்கு அவர் என்னை வேண்டவில்லையாதலின் வழக்கை நான் கெடுத்துவிடுவேனோ என்னும் பயம் அவருக்கில்லை. அவர்கள் அமர்த்தியிருந்த கெட்டிக்காரத் தென்னாப்பிரிக்கா வக்கீல்களுக்கு உதவியாயிருக்கவே என்னை வேண்டினார். புதிய தேசங்களுக்குச் சென்று புதிய அநுபவங்களைப் பெற நான் ஆவலுள்ளவனாயிருந்தேன். இந்தியாவில் எனக்கு வழக்குப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தரகு தரவேண்டியிருந்தது மிகவும் வெறுப்பையளித்தது. கத்தியவாரில் அப்போது குடிகொண்டிருந்த சூழ்ச்சி நிரம்பிய நிலை என்னால் சகிக்கக்கூடாததாயிருந்தது. அவர்கள் என்னை அமர்த்த விரும்பியது ஒரு வருஷ காலத்திற்குத்தான். அதை ஏற்றுக்கொள்ள எனக்கு ஆட்சேபம் எதுவும் தோன்றவில்லை. தாதா அப்துல்லா கம்பெனியார் என்னுடைய பிரயாணச் செலவையும், தென்னாப்பிரிக்காவில் தங்கியிருக்கும் போது ஆகும் செலவையும் ஒத்துக்கொண்டு மொத்தத்தில் 105 பவுன் தருவதாகச் சொன்னபடியால் எனக்கு நஷ்டமெதுவும் ஏற்படுவதற்கு இடமில்லை. எனக்குத் தந்தை போன்றவராயிருந்த காலஞ்சென்ற என் தமையனார் மூலமாய் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. அவருடைய விருப்பத்தை நான் கட்டளையாக ஏற்றுக்கொள்பவன். நான் தென்னாப்பிரிக்கா செல்வதை அவர் விரும்பினார். எனவே 1893-ம் வருஷம் மே மீ நான் டர்பன் போய்ச் சேர்ந்தேன்.

பாரிஸ்டர் என்ற கௌரவத்திற்கேற்ப, என் எண்ணத்தில், நன்றாக உடை தரித்துக்கொண்டு, எனக்குரிய முக்கியத்தையும்மனதிற்கொண்டு டர்பன் துறைமுகத்தில் இறங்கினேன். ஆனால், விரைவிலேயே என்னுடைய மயக்கம் தெளிந்தது. என்னை அமர்த்திய தாதா அப்துல்லாவின் கூட்டாளி நேட்டாவில் உள்ள நிலைமையைப்பற்றி எனக்குச் சொல்லியிருந்தார். ஆனால் அங்கு நான் கண்ணால் கண்ட நிலைமை அவர் கூறிய விவரத்தை முற்றும் பொய்ப்படுத்திற்று. அவர் மீது தப்பில்லை. அவர் கபடற்ற சாதுமனிதர். உண்மை நிலை அவருக்கே தெரியாது. நேட்டாவில் இந்தியர் உள்ளாக்கப்படும் கஷ்டங்களை அவர் அறியார். மிகுந்த அவமதிப்புக்குரியதான நிலைமையும் அவருக்கு அவ்வாறு புலப்படவில்லை. நான் இறங்கிய முதல் நாளன்றே வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை மிகவும் அவமதிப்பாக நடத்துவதைக் கண்டு கொண்டேன்.

நான் வந்த இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் எனக்கு நேர்ந்த கசப்பான அநுபவங்களையும், ரயில் வண்டிகளில் நான் அடைந்த கஷ்டங்களையும், வழியில் அடிபட்ட வரலாற்றையும், ஹோட்டல்களில் தங்க இடங்கிடைத்தல் அசாத்தியமாயிருந்ததையும் பற்றி இங்கு நான் விவரிக்கப் போவதில்லை. இந்த அநுபவங்கள் எல்லாம் என் உள்ளத்தில் நன்றாகப் பதிந்துவிட்டன என்று கூறுதல் மட்டுமே போதுமானது. சுய நன்மையை முன்னிட்டும், புதிய தேசத்தைக்காணும் ஆசையினால் தூண்டப்பட்டும் ஓரே ஒரு வழக்கிற்காக மட்டுமே நான் அங்கே போயிருந்தேன். ஆகையால் முதல் வருஷத்தில் அந்த அநீதிகளைப் பார்க்கும் அளவிலும், அவற்றிற்கு ஆளாகும் அளவிலும் நின்றேன். பின்னர் என்னுடைய கடமையை உணரலானேன். சுயநன்மையை உத்தேசித்தால் தென்னாப்பிரிக்கா எனக்குப் பயன்படாது என்று தெரிந்தது. என்னை அவமதிப்புக்காளாக்கும் ஒரு நாட்டில் தங்கிப் பணந்தேடுவதை நான் விரும்பாதது மட்டுமன்று; அதை அடியோடு வெறுத்தேன். இவ்வாறு எவ்வழி செல்வதென்று தெரியாமல் திகைக்கலானேன். இரண்டு வழிகள் எனக்கு இருந்தன. தென்னாப்பிரிக்காவைப்பற்றி முன்னர் எனக்குத் தெரியாத நிலைமை இப்போது தெரிய வந்திருக்கிறது என்னும் காரணத்தின் மீது தாதா அப்துல்லா கம்பெனியாரின் ஒப்பந்தத்தை நீக்கிக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்பி ஓடிப்போய் விடலாம்; அல்லது எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு ஏற்றுக்கொண்ட வேலையைச் செய்து முடிக்கலாம்.

மேரிட்ஸ்பர்கில் ஒரு போலீஸ் சேவகன் என்னை ரயில் வண்டியிலிருந்து வெளியே இழுத்துத் தள்ளிவிட்டான். வண்டி போய் விட்டபடியால் பிரயாணிகள் காத்திருக்கும் அறையில் குளிர் நடுக்க உட்கார்ந்துகொண்டிருந்தேன். என்னுடைய சாமான்களின் கதி என்னவாயிற்றென்பது தெரியாது. யாரையும் அதைப்பற்றிக் கேட்கவும் துணிவில்லை. மறுபடியும் அவமதிப்பும் அடியும் கிடைத்தால் என் செய்வது? அந்நிலையில் தூக்கம்வராதென்று சொல்ல வேண்டுவதில்லை. என் உள்ளம் சந்தேகக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. கடைசியாக அன்றிரவு வெகு நேரம் சிந்தித்த பின்னர், இந்தியாவுக்குத் திரும்பி ஓடுதல் கோழைத்தனமாகும் என்னும்முடிவுக்கு வந்தேன். ஏற்றுக்கொண்ட வேலையைச் செய்து முடித்தேயாகவேண்டும். அவமதிப்புகளையும், அடி உதைகளையும் கூடப் பொருட்படுத்தாமல் பிரிடோரியா போய்ச் சேர வேண்டுமென்று தீர்மானித்தேன். நான் பிரயாணம் புறப்பட்டிருந்தது பிரிடோரியாவுக்குத்தான். வழக்கு அங்கேயே நடந்துகொண்டிருந்தது. என்னுடைய வேலையுடன் கூட, இயலுமானால், இவ்விஷயமாகச் சில நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவும் தீர்மானித்தேன். இத்தீர்மானம் ஓரளவு எனக்குச் சாந்தமும், மனோபலமும் அளித்தது. ஆனால் அன்றிரவு நான் தூங்கவேயில்லை.

மறுநாள்காலையில், தாதா அப்துல்லா கம்பெனியாருக்கும், ரயில்வே ஜெனரல் மானேஜருக்கும் தந்தி யடித்தேன். இருவரிடமிருந்தும் பதில் வந்தது. தாதா அப்துல்லாவும், அப்போது நேட்டாலிலிருந்த அவருடைய கூட்டாளி சேத் அப்துல்லா ஹாஜீ ஆதம்ஜாவேரி என்பாரும் உடனே தக்க முயற்சி எடுத்துக் கொண்டனர். பல இடங்களிலுமிருந்து அவர்களுடைய இந்திய ஏஜண்டுகளுக்கு என்னைக் கவனித்துக்கொள்ளும்படி தந்தியடித்தனர். ரயில்வே ஜெனரல் மானேஜரையும் கண்டு பேசினர். மேரிட்ஸ்பர்க் ஏஜண்டுக்குத் தந்திவந்ததின் பயனாக அவ்வூரிலிருந்த இந்திய வியாபாரிகள் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் எனக்கு ஆறுதல் கூறுமுகத்தான் என்னைப் போலவே தாங்களெல்லாரும் அத்தகைய அநுபவங்களுக்குள்ளாகியதுண்டென்றும், ஆனால் அவை பழகிப்போனகாரணத்தால் அவற்றைத் தாங்கள் பொருட்படுத்துவதில்லையென்றும் சொன்னார்கள். வியாபாரத்துக்கும், மான அவமானங்களைப்பற்றிய நுட்ப உணர்ச்சிகளுக்கும் பொருந்தாதென்று கருதி அவர்கள் பணத்தைப் பெட்டியில் போடுவது போல் அவமதிப்புகளையும் வாங்கிப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு வரவிருந்தார்களாம். மற்றும், இந்தியர்கள் பிரதானவாயில் வழியாக ரயில்வே நிலையத்தில் நுழையக் கூட முடியாதென்றும், பிரயாணச் சீட்டுப் பெறுதல் எவ்வளவு கஷ்டமானதென்றும் அவர்கள் கூறினார்கள். அன்றிரவு நான் பிரிடோரியாவுக்குப் பிரயாணமானேன். இதயகமல வாசியான இறைவன் என்னுடையமன உறுதியை அப்போதே முழுதும் சோதித்து விட்டார். பிரிடோரியா போகும் வழியில் இன்னும் அதிக அவமதிப்புகளும், அடிகளும் எனக்குக் கிடைத்தன. ஆனால் இவையெல்லாம் என் தீர்மானத்தை உறுதிப்படுத்தினவே யல்லாமல் வேறில்லை.

(தொடரும்.)

---

மனிதன் உலகில்
எதற்காகப் பிறக்கிறான்?
ஞானம் பெறுவதற்கு.
அதை எவ்விதம் பெறுவது?
பெரிய நீர் நிலை போன்ற
கஷ்ட சாகரத்தைக்
கடத்தலால் வரும்
மாயா நீக்கத்தாலன்றோ
பெறலாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கொலை என்பது என்ன ?

கொலை என்பது மனிதனை மனிதன் கொல்லுவதுதான் என்றும், அதுதான் பாவமென்றும், அதற்குத் தான் தண்டனை உண்டென்றும் எண்ணுதல் கூடாது. உலகத்திலுள்ள 84 லக்ஷ ஜீவ பேதங்களில் யாதாமொன்றின், உடலிலிருந்து உயிரை நீக்குவோமானாலும் அதுவும் பெருங் கொலையேயாகும். மனிதனைக் கொல்லுவது மட்டும் பாவமென்றும், ஆடு, கோழிகளைக் கொல்லுவது நியாயமென்றும் பிரித்தோ, திரித்தோ, கூறுவதற்கில்லை. எந்த அற்ப ஜந்துவாயினும் கொல்லப்படுமானால் அது கொலைக் குற்றமேயாகும். இம்மாதிரிக் குற்றங்களுக்கு ராஜ தண்டனையில்லாவிடினும் கூட, தெய்வ தண்டனையுண்டென்பதை, எல்லோரும் — தர்மத்தைக் கைக் கொள்ளுவோர்களும், கைக் கொண்டவர்களும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். புலால் உண்ணாமல் மட்டும் இருக்கிற ஒரு காரணத்தினால் ஜீவகாருண்ய தர்மத்தை கைக் கொண்டு விட்டதாகாது. காருண்யம் அப்படியே நமது உள்ளத்தில் ததும்ப வேண்டும். பிற உயிர்களிடத்தில் அன்பு சொரூபமாய் ஒழுக வேண்டும். அவைகளுக்கு எக்காலத்தும், எக்காரணத்தைக் கொண்டும், மனோ வாக்குக் காயங்களால் ஹிம்சை செய்ய நம் மனம் ஒவ்வாத தன்மையில் படிப்படியாகப் பழகி, உண்மையான ஜீவகாருண்யச் சீலர்களாக வேண்டும்.

நாம் அறியாமல் எந்த ஜீவ ஜந்துவின் உயிரை அதன் உடலிலிருந்து நீக்கி விட்டாலும், அது கொலைக் குற்றந்தானென்றாலும், அறியாமல் செய்த குற்றமென்ற காரணத்தினால் பாவ மன்னிப்பு உண்டு. ஆனால் நமது மனமும், இந்திரியங்களும், அறிவும, மனச்சாட்சியும் கலந்து ஒத்து இணங்கிச் செய்யும் கொலைக் குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது. ஒரு அற்பப் பிராணியின் உயிர் தானே என்று அலக்ஷியஞ் செய்து விடுவதற்கில்லை. முற்பகலில் செய்த வினையைப் பிற்பகலில் அனுபவிக்க வேண்டியதுதான்.

ஆகவே, நமது தினசரி வாழ்க்கையில் சந்திக்கும் எறும்பு, ஈ, பேன், மூட்டைப் பூச்சி முதலிய சிறிய உயிர்ப் பிராணிகளிடத்திலும் அன்பு கொண்டொழுகி, அவைகளின் உயிர்களுக்கு ஆபத்து வரா வண்ணம் ஜாக்கிரதையாகக் காக்க வேண்டியது நமது கடமையாகும். அவைகளால் நமது உடலுக்குத் தொந்தரவும் துன்புறுத்தலுமிருந்தாலும் கூட சகித்துக் கொண்டு உயிருக்குப் பங்கமில்லாமல் அவைகளை அப்புறப்படுத்தி விட்டு நாம் விலகிக் கொள்ளுவது தான் கிரமமாகும். இது மட்டுந் தானா ? ஓரறிவாகிய புல், பூண்டு, மரம் செடி, கொடி முதலிய தாவர வர்க்கங்களுக்கும் உயிர் உண்டென்று நமது முன்னோர்கள் கண்டு அவைகளுக்கும் தீங்கு செய்யக் கூடாதென்ற மேலான முறைகளைக் கைக் கொண்டு நமக்கு வழி காட்டியிருக்கிறார்கள்.

தபோதனர்கள், மகரிஷிகள் முதலிய முற்றும் துறந்த நமது சைவ மதப் பெரியோர்கள் உலர்ந்த சருகுகளையே உண்டு, சுனை நீரையே அருந்தி, மகா உன்னதமான நிலையில் ஜீவகாருண்ய தர்மத்தைக் கடைப்பிடித்து புண்ணிய சீலர்களாய் முக்தி நிலை பெற்று பிறவித் துன்பத்தை ஒழித்திருக்கிறார்கள். இந் நிலைமையையும், இத் தன்மையையும் ஒவ்வொரு சைவ சமயத்தவரும் அடைய வேண்டுமென்பதே நமது மதத்தின் சித்தாந்தம். இவ்வுன்னத நிலையை எந்த மனிதனும் இடீரென்று கேட்ட மாத்திரத்திலாவது, படித்த மாத்திரத்திலாவது அனுஷ்டித்து விட முடியாதென்ற காரணத்தைக் கொண்டு, நமது முன்னோர்கள் ஹித்து மதத்தினர்களின் ஜீவிய வாழ்க்கைக் காலத்தை நான்கு பிரிவுகளாகச் செய்து அவைகளுக்குத் தக்க ஆசார அனுஷ்டானங்களையும், சட்ட திட்டங்களையும், முறைகளையும் அமைத்திருக்கிறார்கள். அவையாவன, பிரமச் சரியம், கிரகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம். நாம் மேலே கூறிய முற்றும் துறந்த நமது பெரியோர்களின் ஒழுக்கமானது நான்காவது படியாகும். ஆனால் இல்லற தர்மத்திலுள்ளவர்கள் ஜீவகாருண்ய தர்மத்தைக் கைக் கொண்டு ஒழுக வேண்டியதாக ஏற்பட்ட விதியில் தாவர வர்க்கங்களை விலக்கி, மற்ற ஜீவராசிகளிடத்தில் கண்டிப்பாய் ஹிம்சையின்றி நடந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, இல்லற தர்மத்தின் இன்ப நிலையை நன்கு உணர்ந்த சைவ மத சிகாமணிகளே ! நாம் உயிர்ப் பிராணிகளிடத்தில் மனோ வாக்குக் காயங்களால் ஹிம்சையில்லாமல், ஒழுகப் படிப்படியாய் முயற்சிக்க வேண்டும்.

மனம், வாக்கு, காயம் என்ற முறையில் முதல்படியாகிய காயத்தால் ஹிம்சை செய்யும் வகையைப் பற்றி ஆராய்வோம்.

காயம் என்பது சரீரமாகும். நமது சரீரத்தால் பிற உயிர்ப் பிராணிகளை வெட்டி, அவைகளின் உயிர்களை உடல்களிலிருந்து நீக்குவதோ அவைகளின் மாமிசத்தைக் கையால் தொட்டுக் கறி சமைப்பதோ, அதை நாவில் ருசி பார்ப்பதோ முதலிய காரியங்கள் காயத்தால் செய்யும் குற்றமாகும். இந்த வகையில் முதல் படியாகிய நமது காயத்தால் பிற உயிர்களுக்கு ஜீவ ஹிம்சையில்லை என்ற நிலையை நாம் அடையா விட்டால் மற்றுமிரண்டு முறைகளில் ஈடுபடவே முடியாது. ஆகவே, ஜீவகாருண்ய தர்மத்தில் முதல் படியை யடைவதற்குப் பொல்லாப் புலால் உண்ணும் கொடிய வழக்கத்தை நாம் நிறுத்தி விட வேண்டும். ஜீவகாருண்ய தர்மத்தின் எல்லை இதோடு முடிந்து விட்டதென்று எண்ணி இறுமாந்து போகாமல் மற்றுமிரண்டு படிகளையும் அடைய நாம் முயற்சிக்க வேண்டும்.

இரண்டாவது படியாகிய நமது வாக்கால் யாருக்கும் தீங்கு நேரா வண்ணம் பார்ப்பதாவது, பிற உயிர்ப் பிராணியைக் கொல்லும்படி நமது வாயினால் சொல்லி ஏவக் கூடாது. யாரையும் அடித்து ஹிம்சை செய்யவாக்குச் சகாயம் செய்யக் கூடாது. மற்றவர்கள் மனம் நோகும் வண்ணம் கெட்ட வார்த்தைகளாலும், வசை மொழிகளாலும் திட்டித் திணறக் கூடாது.

மூன்றாவது படியாகிய மனத்தால் ஒருவருக்கும் தீங்கு செய்ய நினைக்கவோ, பொறாமைப் படவோ, அசூசையாக எண்ணவோ கூடாதென்பதாம்.

மேலே கூறியவாறு நமது முன்னோர்கள் ஹித்து மத சித்தாந்தத்தில் ஜீவகாருண்ய தர்மத்தை முக்கியமாக அமைத்து அதற்குப் படிப் படியாகப் பல முறைகளையும், படிகளையும் வகுத்து அதற்குத் தக்கபடி ஆசார அனுஷ்டானங்களைப் பிரித்து சட்ட திட்டங்களை விதித்திருக்கிறார்கள். நமது மதத்தில் கொலை என்பதைப் பற்றி விரிவாக வியாக்கியானம் செய்து கொலை செய்யக் கூடாதென்று கண்டிப்புச் செய்திருக்கிறார்கள்.

அப்படியிருக்க, நமது மதத்தில் கூறப்பட்டிருக்கும் சக்தி வணக்கத்தில் பரா சக்தியின் ஆலயத்தின் முன்பாக ஆடு, கோழிகளை வெட்டி ஆராதனை செய்யலாமா ? இதுவும் கொலை தானே ! மனிதனைக் கொன்றால் கொலை; ஆடு, கோழிகளைக் கொன்றால் அதற்குப் பெயர் பலியா ? ஏன் இதையும் கொலை என்று கூறக் கூடாது ? மனிதனுக்குப்போல் தேகத்திலிருந்து இரத்தம் வர வில்லையா ? அங்கம் பதை பதைக்க வில்லையா ? கொலையே கூடாதென்று கட்டளையிடும் நமது ஹித்து மதம், நாம் வணங்கி வழி படும் தெய்வத்திற்குக் கொலைத் தொழிலாகப் பலியிடும் கொடிய வழக்கத்தை எப்படி ஏற்கும் ? ஆகவே உயிர்ப் பிராணிகளைப் பலியிடும் வழக்கத்தை அறவே ஒழித்து, பங்குனிப் பொங்கலில் சுத்த ஆராதனை செய்து, பக்தியாய்க் கொண்டாடுவோமாக.

P. Tr.

## சோம்பல்.

அலைகடல்சூழுமிந்த அவனியில் ஆண்டவனால் படைக்கப்பட்ட சகல கோடி ஜீவராசிகளிலும் மானிடப்பிறப்பே மேலென்பது வெள்ளிடைமலை. ஏனெனில், கடவுள் தமது திருச்சாயலாகவே நம்மைப்படைத்து சகல அறிவுகளையும் நமக்குக் கொடுத்திருக்கிறார். இதனாலன்றோ "அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என ஔவைப்பிராட்டியாரும் கூறிப்போந்தனர். இத்தகைய புகழுடம் பெடுத்த சிலர் உண்பதுவும் உடுப்பதுவும் உறங்குவதுமே தொழிலாகக்கொண்டு காலத்தை வீணாய்க்கழிக்கின்றனர். சிலர் சரீர திடகாத்திரத்தோடிருக்கும் வருந்தி வேலை செய்வதற்கு சோம்பேறிகளாய் தெருத்தெருவாயலைந்து வீடு வீடாகச் சென்று யாசகமெடுத்து வயிறு வளர்த்து வருகின்றனர். சிலர் தங்களின் தலைவிதி இப்படிருக்க, நாம் எதைச் செய்து தானென்னபயன்; கடவுளின் தயவிருந்தால் எல்லாம்தானே வந்து கிடைக்குமென வாளாவிருந்து விடுகின்றனர். நாம் யாதொரு முயற்சியிலுமீடுகொள்ளாமல் முகடிகளாயிருந்து கொண்டிருந்தால் தெய்வம் கொண்டுவந்து அள்ளித் தட்டுமா ? பாடுபட்டால் கூலியுண்டு. நம்மாலான முயற்சி கொண்டிருந்தால் தான் தெய்வமும் கண் பார்க்கும். அவரவர் சக்திக் கேற்றவாறு ஏதாவதொரு தொழிலைச் செய்யின் அதற்குத் தகுந்த கூலி கிடையாமற் போகா. நிற்க, இப் பூவுலகின் கண் முதலில்லா வியாபாரிகள் மிகுந்து விட்டனர். இவர்களின் தொழிலென்ன வென்றாலோ திருடலும், வழிப் பறிக் கொள்ளையும், முடிச்சவிழ்த்தலும், கொலை முதலிய பாதகத் தொழில்களைப் புரிவதுமே யாம். கேவலம் இத்தகையோரை பூமிக்குப் பாரமாகவிருக்கும் சோம்பேறிகளென்று சொல்வதை விட வேறென்ன சொல்வது ? "சோம்பேறியே ! எறும்பின் கூடப் போ" என்பது நமது நாட்டுப் பழமொழிகளி லொன்று. அற்ப ஜெந்துவாகிய சிறு எறும்புகள் வெயிற் காலங்களில் ஆங்காங்கு ஊர்ந்து தமக்கு வேண்டிய இரைகளைத் தேடி மழைக் காலங்களில் தம இல்லத்திலிருந்து உண்டு மகிழ்கின்றன. மிருகங்களும் கடவுளால் தமக்குக் கிடைக்கப்பட்ட நான்கு கால்களைக் கொண்டு ஆங்காங்கு ஓடிச் சென்று அன்றாடம் தமக்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடிப் புசித்து வாழ்கின்றன. பறவைகளும் தம தழகிய சிறகை விசித்து ஆகாயத்திற் பறந்து தமக்கு வேண்டிய இரைகளைத் தேடித் தாமும் புசித்து தம் குஞ்சுகளுக்கும் கொடுத்துக் காப்பாற்றுகின்றன. பகுத்தறிவற்ற மிருகங்களுமிங்கனமிருக்க, பகுத்தறிவு பெற்ற மானிட ஜென்மமெடுத்த நாம் நமது காலத்தை வீணே தீயவழக்கங்களாகிய இழி தொழில்களில் செலவழிப்போமாகில் அது நம்மைப்படைத்துக் காப்பாற்றும் அந்த திவ்ய பரம் பொருளுக்குத் துரோகம் செய்ததாகும். விதியிருந்தால் எல்லாம் தானே வந்து கிடைக்குமென மணப்பால் குடித்து சும்மா இருப்பார்களாகில் அவர்களின் கதி அதோகதியாகத்தான் முடியும். நிற்க, கத்தோலிக்க மத ஜெபப் புத்தகத்தில் சின்னக் குறிப்பிடம் ஆறுவது பிரிவில் ஆங்காரம், கோபம், மோகம், லோபித்தனம், போசனப்பிரியம், காய்மகாரம், சோம்பல் என்பவை பாவங்களாகும் எனக்குறிக்கப் பட்டிருக்கிறது. எனவே சோம்பலும் ஓர் பாவமெனக் காணக்கிடப்பதால் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற ஏதாவதொரு தொழிலைச் செய்து சோம்பலை அறவே யொழித்து இகபரமிரண்டிற்கும் நற்புகழைத்தேடுவோமாக.

பெ. சி. மா. ராயப்பநாடார்,

குருணிகால, இலங்கை.

## மதிப்புரைகள்.

### "ஆனந்த விஜய விகடன்"

இப்பெயர் கொண்ட பத்திரிகையின் முதற் சஞ்சிகை யொன்று கிடைக்கப் பெற்றோம். இது ஒரு விகட மாதாந்தப் பத்திரிகையாகும். புஸ்தக ரூபத்திலுள்ளது. இது விகடகவி, புதூர் ஸ்ரீமான் வைத்திய நாதையரவர்கள் பத்திராதிபத்தியத்தின் கீழ் சென்னையினின்றும் வெளியாகியிருக்கிறது. பொறிக்கப் பெற்றுள்ள விகட விஷயங்களெல்லாம் பொங்கு நகைப்புக்குரித்தானவையாயிருக்கின்றன. விகடத்திலேயே ஞானப்பாலும் வார்க்கப்படுகிறது. வருடச்சந்தா உள்நாட்டிற்கு ரூ 2-0-0; வெளிநாட்டிற்கு ரூ 2-8-0. விலாசம் "பத்திராதிபர்" "ஆனந்த விஜய விகடன்" 21. ஆண்டர்ஸன் தெரு, மதராஸ்"

### "தமிழராட்சி"

இந் நாமம் புனைந்த வாரப்பத்திரிகையின் 1 முதல் 9 சஞ்சிகைகள் கிடைக்கப்பெற்றோம். பிரதி வியாழனும் பிரசுரிக்கப் படுகிறது. இது புஸ்தக ரூபத்திலுளது. இது சுயமரியாதை உழைப்பாளர் ஸ்ரீமான் ஜே. என். இராமநாதனவர்களைப் பத்திராதிபராகக் கொண்டு சென்னையிலிருந்து வெளியீடாகிறது. இதன் ஆசிரியரைப் பற்றி தமிழ் நாட்டில் அறியாதாரிரார் என்றே கூறலாம். நந்தமிழ் நாட்டில் யாதொரு உண்மைத் தத்துவமும் பற்றியதன்றி, இடைக்காலத்தில் பிறரால் புகுத்தப் பட்டு நாளடைவில் தமிழ்மக்களைப் பீடித்து அவர்களை அல்லற்படுத்தும் பல கெட்ட வழக்கங்களை அறவே யொழிக்க இவர் கொண்டஉளப்பாடுக்கொப்பஇப்பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறார். இதன் வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ 1—8-0ம் வெளிநாட்டிற்கு ரூ 2—8—0 யுமாகும். 98. கச்சேரி ரோடு, மயிலாப்பூர் சென்னை" என்ற விலாசத்திற்கெழுதிப்பெறவும்.

### "குமரன்" (மாதப்பதிப்பு.)

இப்பத்திரிகையின் 7-ம் ஆண்டு முதற் சஞ்சிகையொன்று கிடைக்கப் பெற்றோம். 7 ஆண்டுகளாய் நடைபெற்றுவரும் பத்திரிகையைப்பற்றி யாம் அதிகமாய் எழுதத்தேவையில்லை. இப்பத்திரிகையின் வாரப்பதிப்பொன்றும் நடந்து வருகிறது. ஆசிரியர் காரைக்குடி, ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியாரவர்களாவர். காந்தி வழி நின்று தேச சேவை செய்யும் உத்தமர்களிலிவரும் ஒருவர். இன்னாரைப் பற்றியும் இவரது பத்திரிகைச் சிறப்பு பற்றியும் பத்திரிகை யுலகு நன் கறியும். கிடைத்துள்ள சஞ்சிகையில் வாசிக்கத்தக்க கட்டுரைகள் அறிவாளிகளால் வரையப்பட்டுத் தோன்றல் காண்கின்றோம். வருடத்திற்கு சந்தா உள்நாட்டிற்கு ரூ 1—8—0ம், வெளிநாட்டிற்கு ரூ 2—0—0 மாகும்.

### கவுஜனர்க்கும்மி.

இக்கும்மிப்பாடல் புஸ்தகம் ஒன்று வரப்பெற்றோம். இது கத்தோலிக் கிறிஸ்தவர்கள் சிரேஷ்ட குரு கவுஜனர் அவர்கள் சிறப்புக்குறித்து பாடப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் வடக்கன்குளம் ஸ்ரீமான் க. மா. தேவசகாய நாடாரவர்களாவர். இன்னாரும் நம்மித்திராபிமானிகளில் ஒருவர். கத்தோலிக் கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் இதை வாங்கிப்படித்து குரு கவுஜனரின் சிறப்பையறிந்து கொள்ளுவாராகவும். பக்கங்கள் 12 கொண்டது. விலை சதம் 20 (அணா 3.) வேண்டுவோர் "எஸ். பி. ஆசீர்வாத நாடார், 34 காலி ரோடு, கொள்பிட்டி, கொழும்பு" என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection